
# விக்கினேஸ்வரம் 2012




SREE AYYAPPAN TEMPLE HALL
36 Mansons Avenue
Harrow Middlesex HA3 5AR

28th 04 2012

Letzmove Property Ltd

... let us work for you

## Lettings

### Looking to Rent

We have large selection of properties available to Rent in Following areas

Tooting - Mitcham - Colliers wood Malden - Streathem - Croydon - etc.

## Landlords

- Lower Commission
- Best Rent Achieved
- Free Valuation - No Obligation
- Professional Tenants
- Tenants Referencing
- Inventory Prepared

## Sales

- Lower Commission
- Advert on Web & Papers



புதிய பரிமாணத்துடன்
சிறந்த சேவையாற்ற...

RESIDENTIAL & COMMERCIAL ▶ SALES ▶ LETTINGS ▶ MANAGEMENT

182 Mitcham Road, Tooting, London SW17 9NJ Tel: 020 8767 5800 Fax: 020 8696 1900
Email: info@letzmoveproperty.co.uk Web: www.letzmoveproperty.co.uk

# கல்லூரிக் கீதம்

**பல்லவி**

வாழ்கவே வளர்க வாழ்கவே — வளரும்
விக்னேஸ்வரா வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

**சரணம்**

கலைகள் விஞ்ஞானம் கவினுடன் இங்கே
கற்றெழில் பூண்டிடுவோம்
இலைமறை காயாய் விளங்கும் சிறார்கள்
இலங்கிடக் கண்டிடுவோம்
(வாழ்கவே)

ஆங்கிலம், தமிழ் மொழி அழகிய முறையில்
ஆய்ந்த நாம் கற்றிடுவோம்
தேங்கிய புகழ்தன் ஊற்றிடமாக
திறன் பணி கண்டிடுவோம்
(வாழ்கவே)

வர்த்தகவியலும் தொழில் முறைக் கல்வி
வளர்த்திட முயன்றிடுவோம்
நர்த்தமை, இசைகள், நாடகம் என்பவை
நாளும் பயின்றிடுவோம்
(வாழ்கவே)

எண்ணொடு எழுத்து என்பவை இரண்டும்
எம்முயிர் என்றிடுவோம்
விண்ணக இன்பம் மண்ணினிற் கல்வி
என்றதைக் கூறிடுவோம்
(வாழ்கவே)

## தலைவரின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரியின் ஏழாவது வருடாந்த விழாவினையும் அதனைக்குறித்து வெளியிடப்படும் விக்னேஸ்வரம் மலரினையும் வரவேற்று மனதார வாழ்த்துகிறேன்.

எமது பழைய மாணவர்களினது அயராத முயற்சியே தொடர்ந்தும் இச்சங்கத்தின் செயற்பாடாகும்.



நல்முயற்சி தொடர வாழ்த்துகிறேன்.

அன்புடன்

**வே. லீலாரத்தினம்**

## பொருளாளரிடமிருந்து...

பத்து மாதங்கள் சுமந்து பெற்ற தாயோடு இருப்பது இரத்தபாசம். தொப்புள்கொடி உறவு இது எந்த ஜீவராசிக்கும் பொதுவானது. அனால் பத்து வருடங்கள் எங்களைத் தாங்கி வளர்த்த கல்லூரித் தாய்க்கும் எங்களுக்குமிடையிலான உறவு மிகவும் அற்புதமானது. பெற்ற தாய் எங்கள் வயிற்றுப் பசியைப் போக்குகிறாள். எங்கள் கலைத்தாய் எங்கள் அறிவுப் பசியாய் போக்குகிறாள். அந்த நன்றியை நாங்கள் மறக்கலாமா?

அன்பர்களே, நண்பர்களே, நலன் விரும்பிகளே எங்கள் விக்னேஸ்வரத்தாயின் பிள்ளைகளே விக்னேஸ்வரக் கலைத்தாயின் பிள்ளைகளாகிய நாங்கள் ஆண்டுதோறும் கலை விழா நடாத்தி "விக்னேஸ்வரம்" என்ற சஞ்சிகைகளையும் வெளியிட்டு வருகின்றோம். எனவே நீங்களும் எங்களோடு இணைந்து அந்தக் கலைத்தாய் வீறு பெற்று வளர எங்களாலான உதவிகளைச் செய்வோம். ஒரு கை தட்டினால் ஓசை வராது எனவே எல்லோரும் ஒன்று கூடி செயற்படுவோம் இந்த விழாவிலும் நீங்கள் வருகை தந்து விழாவைச் சிறப்பித்து வைக்க வேண்டும் என்று உங்களில் ஒருவராகக் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்

நன்றி



அன்புடன்,

**திரு இராசலிங்கம் பத்மசிறி**

பொருளாளர்.



"ஊருக்குத் தேவை சில சாட்சி
உனக்குத் தேவை மன சாட்சி"

இது ஒரு சினிமாப்பாடல். நாம் சிறிது சித்திப்போம் என்ன செய்கிறோம், எமது மண்ணுக்கும் தாய்க்கும் தனது பாடசாலைக்கும் என்று சிந்தித்தால் வருடத்தில் ஒரு முறை நாம் ஒன்று கூடுவது பெரும் பிரச்சினையாக இருக்காது. ஒரு கை தனித்து ஒலி எழுப்ப முடியாது பல கை தட்டினால்தான் சத்தம் பலமாக இருக்கும். கவியரசர் கண்ணதாசன் "நானிருக்கும் நிலையில் உன்னை என்ன கேட்பேன்", நன்மை செய்து துன்பம் வாங்கும் உள்ளம் கேட்பேன்" என்றார். காய்த்த மரந்தான் கல்லெறி படும். கல்லெறி பட்டுவிட்டது என்பதற்காக காய்க்காமல் விட்டதா? மரம் என்று அடிக்கடி அம்மா சீறுவார். பலனைக் கருதாது உழைக்கச் சென்றான் பாரதி. ஆனால் நாம் என்ன செய்கிறோம் என்று சிந்தித்தால் சிரிப்பாகத்தான் இருக்கும். பணம் பணம் என்றும் அலைந்து கொண்டு ஏன் தம் உடலையே கவனிக்காமல் ஓடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இறுதியில் நாம் ஒன்றுமே கொண்டு போவதில்லை. அது மட்டுமன்றி வீணாக செலவு செய்து அதிக ஆடம்பரத்துக்குச் சென்று இறுதியில் கஷ்டத்தை அனுபவிக்கிறோம். ஆனால் தர்மம் செய்வது தவறான காரியம் என்று எண்ணுகிறோம் "தர்மம் தலைகாக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும்" எனவே சிறிது சிறிதாகக் சேர்த்து சிறிதாக தானம் செய்யுங்கள். முதல் இருவருடங்கள் சிறப்பாக நடக்க உதவி செய்தீர்கள். காலம்செல்லச் செல்ல தேய்ந்துபோக நட்டத்தில் போகிறது. அது முடியாமல் போகிறது மட்டுமன்றி விழாவை நாம் திட்டமிட்டபடி நடத்த முடியாது. சுயநலத்தைவிட்டு பொதுநலனைச் சிந்தித்து செயலாற்றினால் நாம் ஒன்றாக இருக்க முடியும். நான் இம்முறை கரவெட்டி விக்கினேஸ்வர விளையாட்டு போட்டிக்குச் சென்று இருந்தேன். பாடசாலை சிறப்பாக இருக்கின்றது கட்டிடங்கள் விளையாட்டு, மைதானம், தோட்டம், என்று எல்லா வகையிலும் நிறைவு பெற்றதுடன் மாணவர்களின் கல்வி, உடற்பயிற்சி என்றும் பண்பாட்டிலும் உயர்ந்து நிற்கின்றது. இதற்கு எமது சிறு பங்களிப்பும் உள்ளது என்று எண்ணும்போது பெருமையாக இருந்தது. எமது பங்களிப்பினரல் (Primary Section) சின்னப் பாடசாலை தனியாக நாம் வாங்கிக் கொடுத்த நிலத்தில் நடந்து கொண்டிருக்கின்றது. ஒரு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. பாதையில்லை. வெள்ளவாய்க்காலைப் பாதையாக வைத்து இயங்குகின்றது. மழைக்காலங்களில் குழந்தைகள் பாடசாலை செல்ல முடியாது. 4 வகுப்புக்களுக்கான இடத்தில் 5 வகுப்புகள் நடக்கின்றது. அதிபர் பக்கத்தில் ஒரு மேசையை வைத்து அலுவலகமாக பாவிக்கின்றார். நாம் செய்த உதவியை நிறைவாக செய்வதற்கு காணியைச் சுற்றி மதில் போடுவதுடன் ஒரு அலுவலகமும் வகுப்பறையையும் அமைத்துக் கொடுக்க வேண்டும். அவர்கட்கு உதவுவது மட்டுமன்றி அங்குள்ள எமது சிறார்கட்கும் உதவும் நோக்கமாக 11 சித்தியடைந்த மாணவர்கட்கு பரிசில்கள் கொடுத்து ஊக்குவித்தோம். இதனைத் தொடர்ந்து செய்ய உங்கள் ஆதரவு வேண்டும். அதனைவிட உங்களதும் உங்கள் பிள்ளைகளினதும் கலையம்சங்களை வெளிப்படுத்தவும் எமது உறவுகளுடன் கலந்து எமது பண்பாட்டை வளர்ப்பதற்கும் இவ் விழா உதவும் என்ற நம்பகிறேன். ஆகவே இதனை வளர்ப்பதற்கு உங்கள் உதவியை வேண்டி நிற்கிறேன். இத்துடன் சென்ற வருட வருமானச் செலவுக் கணக்கைச் சமர்ப்பிக்கின்றேன்.

# வருமானச் செலவுக் கணக்கு 2012

## வருமானம்

| | | |
|---|---|---|
| நுழைவுச் சீட்டு விற்பனை | 1820 | |
| விளம்பரம் | 750 | |
| நன்கொடை (புத்தகம்) (செல்வகாந்தன் செல்வரதி) | 55 | 2625 |

## செலவீனம் (கழி)

| | | |
|---|---|---|
| புத்தகம் அச்சடித்தது | 1250 | |
| தொலைக்காட்சி (TV) விளம்பரம் | 420 | |
| பத்திரிகை விளம்பரம் | 130 | |
| சாப்பாடு | 300 | |
| மண்டப வாடகை | 350 | |
| ஒளி ஒலி | 200 | |
| புகைப்படம் | 150 | 2800 |

**சில்லறைச் செலவு**

| | | | |
|---|---|---|---|
| நுழைவுச் சீட்டு அச்சடித்தது | 50 | | |
| பூமாலை (3) | 90 | | |
| பொன்னாடை | 45 | | |
| தொலைபேசி | 80 | | |
| அஞ்சல் செலவு | 96 | | |
| பரிசில்கள் | 158 | 519 | 3319 |

**வரவிலும் கூடிய செலவீனம்** (694)

பதிவு பார்த்தல் தவிர்க்கப்பட்டுள்ளது

கு. குலசிங்கம்
பிரசித்த நொத்தாரிசு
இல. 87-3/2, ஹம்டன் ஒழுங்கை,
கொழும்பு – 06,
இலங்கை



| | | |
|---|---|---|
| முற்பதிவு | : | பருத்தித்துறை |
| வகை | : | அறுதி |
| ரூபா | : | 250,000.00 |
| காணி | : | 01 |

இல 2506
05-08-2010

இத்தாற்சகலருமறிக,

கரவெட்டி, கரவெட்டி மேற்கைச் சேர்ந்த வைத்தியக் கலாநிதி சின்னத்தம்பி வேலாயுதம் தேவேந்திராவும் குலவரதராசா ராஜீவ் தர்மேந்திராவும் (தே.அ.அ.இல. 742082040V) ஆகிய நாங்கள் யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையின் அயராத நடவடிக்கை மூலம் ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் கிளையிடமிருந்து கிரயமாகப் பற்றிய ரூபா. இரண்டு இலட்சத்தி ஐம்பதினாயிரத்திற்கு (ரூபா.250,000/-) இதன் பின் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தையும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளையும் அதில் எங்களுக்கிருக்கும் சகல நயமுரித்துச் சோந்தைகள் முழுவதையும் குறித்த யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு இதனால் அறுதியாக விற்று ஆட்சியையும் ஒப்படைக்கிறோம்.

இவ்வாதனத்தை இவ்விதம் அறுதியாக விற்க எங்களுக்குப் போதிய உரித்தும் தத்துவமுமுண்டென்றும் இவ்வாதனம் வேறு எவ்வகையாலும் பாரிக்கப்பட்டு அல்லது பராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லையென்றும் குறித்த யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு இவ்வாதனத்தை என்றென்றைக்கும் தற்காத்துக் கொடுப்போமென்றும் வெளிப்படுத்தி இந்த அறுதி உறுதியை முடித்துக்கொடுக்கிறோம்.

# கரவெட்டி அபிவிருத்திச் சபை – 2012

நான் கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவன் என்பது மட்டுமல்ல, கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் என்ற ரீதியிலும் இக்கல்லூரியின் 2012ம் ஆண்டிற்கான பிரித்தானிய பழைய மாணவர் சங்கக் கிளையின் வெளியீட்டில் கல்லூரியின் இன்றைய வளர்ச்சி பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

இதனை எழுதுகின்ற பொழுது எனது கல்லூரி நாட்களைப் பற்றிய எண்ணங்கள் என் மனதில் அலைமோதுகின்றன. அவ்வுணர்வலைகள் என்னை மூழ்கடிக்கப் பார்க்கின்றன. பழைய ஞாபகங்கள் என்மனதைவிட்டு என்றும் விலகியதில்லை. நான் உங்கள் பலரின் வாழ்க்கையைப் போல் எனது வாழ்க்கையிலும் எனது இளமைக்காலத்திலும் விக்கினேஸ்வரக் கல்லூரியெனும் அன்னையின் மடியில் தவழ்ந்து நடந்து வளர்ந்து உயர்ந்து இருக்கிறேன். என்னுடன் கல்வி கற்றவர்கள் பலர் வெவ்வேறு துறைகளில் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவ்வாறு பிரிக்கப்பட்டு எங்கெங்கு வாழ்ந்து வந்தாலும் ஒரே தாயின் பிள்ளைகள் என்ற பந்தம், அந்தப் பாசம் எம்மையெல்லாம் பிணைக்கின்றது.

இவ்வாறு என் மனம் களிப்படைந்தாலும் என் மனதை உறுத்திக்கொண்டிருக்கும் நெருடிக் கொண்டிருக்கும் சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இலங்கையின் பிரபலமான பாடசாலைகள் பலவற்றை உங்களுக்குத் தெரியும். அப்பாடசாலைகளில் வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறு மதங்களில் ஏன் வெவ்வேறு இனங்களில் இருந்து கூட மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். ஆனாலும் எவ்வித வேறுபாடுகளையும் மறந்து தங்கள் பாடசாலை என்ற அந்த ஒற்றுமையான உறுதியான உணர்வு என்னை வியக்க வைக்கின்றது. பெருமைப்படவும் செய்கிறது. அதே வேளை பெருமைப்படவும் செய்கிறது. காரணம் விக்கினேஸ்வராவிலிருந்து படித்து தேறியவர்கள் 90% கரவெட்டியைச் சேர்ந்தவர்கள் என்பதில் பெருமையுண்டு. அப்படியிருந்தும் கூட எங்களில் எத்தனைபேருக்கு அந்த உணர்வு, கரிசனை உண்டு என்பதனை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். எனது அனுபவத்தை சொல்வதென்றால் ஒப்பீட்டளவில் குறைவாகவே இருக்கும் என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எமது கல்லூரி வளர வேண்டும் புகழ் பெறவேண்டும் என்ற எண்ணம் விருப்பம் இருக்கலாம். துரதிஷ்டவசமாக அது வெறும் விருப்பம் என்பதோடு நின்றுவிடுகிறது. அந்த நல்ல எண்ணம், விருப்பம் ஆக்கபூர்வமான செயற்பாடாக உருவாக வேண்டும். எமது கல்லூரியை எவ்வாறெல்லாம் வளர்க்க முடியும் என்றுசிந்தித்து எம்மாலியன்ற உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும்.

நாமெல்லாம் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் என்ற காரணத்துக்காக மட்டும் அல்லாது எமது பிராந்தியத்தில் மிகவும் திறமைகாண நாம் எல்லோரும் பெருமைப்படக் கூடியளவில் இன்று விக்கினேஸ்வரக் கல்லூரி மாணவர்கள் சாதனை புரிந்து வருகிறார்கள் என்று சொல்லுவதில் பெருமையடைகிறேன். சராசரி சித்தி விகிதாசாரத்தைப் பார்க்குமிடத்து, குறிப்பாகக் கணித விஞ்ஞான பாடங்களில்

வடமராட்சியிலுள்ள பாடசாலைகளிற்குள் மிகவும் சிறப்பான பெறுபேறுகளை பெற்று வருகிறது.

சென்ற ஆண்டு கணிதத்தில் 83% விஞ்ஞானத்தில் 72% சித்தியெய்தினர். தேசிய சராசரி இதனிலும் குறைவாகவே உள்ளது. விளையாட்டுத்துறையிலும் சென்ற வருடம் முன்னேற்றமடைந்து தேசிய மட்டத்தில் போட்டிகளில் பங்கு பற்றினர். நமது கல்லூரி மாணவர்கள் கால்பந்தாட்டம். மென்பந்துத் துடுப்பாட்டம் இரண்டிலும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். நுண்கலைத்துறை, நாடகத்துறை, நடனத்துறை என்பவற்றிலும் தேசிய மட்டம் வரை கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளனர். பல துறைகளில் எமது கல்லூரி மாணவர்களின சாதனைகளை அதிபரின் அறிக்கையில் காண முடியும்.

இக்காலகட்டத்தில் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளால் கல்வி வளர்ச்சி குன்றியிருப்பினும் பல பழைய மாணவர்களின் பங்களிப்பினால் கல்லூரி ஓரளவு வளர்ச்சி பெற்றிருக்கிறது. இன்னும் எத்தனையோ நிகழ்வுகள் பாடசாலையின் பொருளாதார நலிவினால் தடைப்பட்டிருக்கின்றன. பிரபல பாடசாலைகள் கூட நிகழ்வுகளை பணவசதியீனம் காரணமாக நடாத்த முடியாமல் இருக்கின்றன. அரசாங்கத்தினால் கல்லூரியின் முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடிவதில்லை. பௌதிக வளங்கள் நிறையவே உள்ளன. ஆனால் ஏனைய செலவுகள் கணிசமாக உள்ளன. பழைய மாணவர்கள் ஒவ்வொருவரும் முன்வந்து இக்குறையை நிரப்பவேண்டும்.

ஒன்றை மறந்து விடலாகாது. கரவெட்டி மக்களின் கல்வித் தேவையின் பெரும்பகுதியை பூர்த்தி செய்வதே விக்கினேஸ்வரக் கல்லூரியேயாகும். இக்கல்லூரியை மேன்மேலும் வளர நாம் உதவினால் கல்வித் தேவைக்காக எந்த ஒரு மாணவனும் கரவெட்டியை விட்டு வெளியே செல்ல வேண்டிய தேவை எதுவும் ஏற்படாது.

அந்த வகையில் பழைய மாணவர்கள் பலருக்கும் எனது கருத்தை கூற முடிந்ததையிட்டு எனக்கு மனநிறைவு. ஒருதாய் மக்களாகிய நாங்கள் எம்மை ஆளாக்கிய பெருமைக்குரிய விக்கினேஸ்வரக் கல்லூரியின் வளர்ச்சிக்கு துணை நிற்க உறுதி பூணுவோம் என்று எனது நண்பர்கள். முதியோர், இளைஞர், உற்றார் உறவினர்கள் அனைவரையும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டுகிறேன்.

சி.பொன்னம்பலம்
தலைவர்
கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம்

## கடவுள் இருக்கிறார் எங்கே?

கட+ உள் கடவுள். கடவுள் என்றால் கடந்து உள்ளும் இருப்பவர் கடவுள். கடவுள் உள்ளுக்குள்ளேயே இருக்கிறார். நீ வெளியில் தேட வேண்டாம் என்று பல சித்தர்கள் கூறியிருக்கிறார்கள். உனது உடலே கோயில், உன்னுள் இருக்கும் உயிரே கடவுள். கடவுள் உன்னில் அன்பின் வடிவமாக இருக்கிறார். இதைத்தான் அன்பே சிவம் என்று கூறுகின்றனர். அன்பு தான் இன்ப ஊற்று. அன்பு தான் இன்ப சோதி என்று கூறி தன் அகங்காரம் தனது நாடு யாவற்றையும் துறந்து. துறவியின் பின் சென்றான் அசோகச்சக்கரவர்த்தி, "காயமே கோயிலாக கடிமனம் அடிமை" என்று பாடினார். அன்பின் முன் இனம், மொழி, நாடு, எல்லாம் அற்றுப் போகும். அன்பு வருபவனிடம் உறைந்து தொடங்கினால் உலகையே விலைக்கு வாங்க முடியும். நிவேதிதா அம்மையார் பெண்ணாக இருந்தும் உலகையைத் தன் கைக்குள் வைத்திருந்தார். வைத்திருந்தது மட்டுமன்றி இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். காந்தியடிகள் தனது அன்பினால் நாட்டையே வென்றெடுத்தார்.

விவேகானந்தர் தனத அன்பின் வெளிப்பாட்டினால் இன்னும் வாழ்கிறார். நீ நல சீறி பிரபு பாதா என்ற 60வயது முதியவர் கிப்பீஸ் வாழும் அமெரிக்கப் பகுதியில் சென்று தனது அன்பினால் இந்த முதுமையிலுமே ஹரே கிருஷ்ணா இயக்கத்தை உலகின் பல பகுதிகளிலும் பரப்பி பல இனமக்களின் தன் அன்பினால் கட்டுப்படுத்தி உலகத்தையே ஒன்றாக்கினார். இப்படிப் பலரை உதாரணமாகக் கூறலாம். "அன்பு" செய்ய முடியாததை ஒருவரும் செய்ய முடியாது.

நாம் இன்று தமிழ் தமிழ் என்று கூறிக்கொண்டு மனித நேயத்தை மறந்து மிருகங்களாக மாறிக்கொண்டிருக்கிறோம். தமிழ் என்று ஒரு குடைக்குள் வாழ்கின்றோமா? சிந்தியுங்கள், சிந்தித்து மற்றவர்களைத் திருத்த வேண்டாம், நாம் திருந்துவோம். எமக்குள் கடவுள் வரட்டும். அப்போது சமுதாயம் மாறும். கடவுள் என்றும் மொழி என்றும் எத்தனையோ கோயில்கள் பாடசாலைகள் உருவாகி எமது அகங்காரங்களையும் எமது அறிவீனத்தையும் உலகுக்கு வெளிக்காட்டுகிறோம்.

எமது வீடே கோயில். நாமே கடவுள் யாவரும். ஒன்றே உலகம்; அன்றே எமது முன்னோர்கள்", யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கூறுகிறார்கள். அன்று ஒரு கட்டுரை வாசித்த ஞாபகம் எல்லோர் உடலிலும்" இரத்தம் உயிர்". ஏன் நாம் சண்டை செய்ய வேண்டும்" என்று அந்த இளமையில் நான் கோபப்பட்டேன். ஆனால் இன்று எவ்வளவு இழப்புக்கள், எவ்வளவு அவலங்கள். கண்முன் பார்த்த அவலங்கள் பயங்கரங்களிலிருந்து தப்பி ஓடி வந்து பல நாடுகளில் தஞ்சம் புகுந்து பல இன மொழி கலாச்சாரங்களுடன் ஒன்றுபட்டு வாழக்கற்றுக் கொண்டோம். ஏன் அவர்களை நாம் உள்வாங்கி ஒன்றாகவும் வாழ்கின்றோம். எது அப்படி வாழ வைத்தது என்றால் அன்பு தான் விடையாகக் கிடைக்கும். சேர்மனியில் நான் சென்றபோது எனக்கு மொழி தெரியாது. பொதுமொழியான ஆங்கிலம் அப்பெண்மணிக்கு தெரியாது. ஆனால் அன்பினால் ஒன்றுபட்டு ஒருவர்க்கொரு பரிசில்களை வழங்கி இணைப்பை உருவாக்கிக் கொண்டோம். இப்படி எத்தனை உறவுகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. 1975ல் என்னிடங் கற்ற மாணவன் ஒருவர் தாய் சிங்களம் தகப்பன் தமிழ். தமது அன்பினால் ஒன்று கூடி திருமணம் செய்து கொண்ட குடும்பம் எமது ஊரில் வந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்த மாணவன் கற்றது வர்த்தகமும் கணக்கியலும்

ஆனால் அவருடைய கொப்பியில் அழகான தமிழில் அழகான வசனங்கள் எழுதப்பட்டிருந்தது. நான் கேட்டபோது தனக்கு தமிழில் நிறையப் பற்று. நான் நிறைய எழுத வேண்டும் என்று ஆசை. ஆனால் வீட்டில் நீ வர்த்தகம் படி வேலை கிடைப்பது இலகுவாக இருக்கும் என்று கூறியதனால் நான் வர்த்தகம் படிக்கிறேன என்றார். நான் சிரித்து விட்டு பிற்காலத்தில் நல்ல எழுத்தாளனக வரவேண்டும் என்று மனப்பூர்வமாக வாழ்த்தினேன். ஆனால் அவர் உயர்தர வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது ஊரைவிட்டுத் துரத்தப் பட்டார். அவர், தாம் அப்போது பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. ஒருவாறு சிங்கள ஊரில் வாழ இடம்பிடித்தோம் என்று கூறினார். அங்கும் எங்களை வாழவிடாது அடிக்கடி தொல்லை தந்தார்கள். நான் ஆசைக்குக் கூட தமிழ் பேசமுடியாது. தொலைபேசியில் சிங்களத்தில் கதைத்துவிட்டு நேரில் வந்து தனது இன்னல்களைக் கூறிக் கவலைப்பட்டார். புத்தகமும் அன்புதான் கடவுள் என்கின்றது. இந்து சமயமும் அதைத்தான் கூறுகின்றது. நாம் யார் அதன் படி நடக்கிறோம். சிறிது நேரம் சிந்தியுங்கள்!

நன்றி

**இராசேஸ்வரி ஈஸ்வரஞானம்.**

*தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாண் என்ன முழம் என்ன.*

*தன்னை நம்பும் தைரியம் இருந்தால் நாள் என்ன பொழுதென்ன.*

*நல்லவர் என்றும் நல்லவரே*

*உள்ளம் உள்ளவர் யாவரும் உள்ளவரே*

*நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்*

## காலத்தை வென்ற எங்கள் அதிபர் அமரர் சிவபாதசுந்தரம்



"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"... என்கிறது குறள்..

வாழ்க்கை என்பது விழித்தலில் தொடங்கி மீளாத்துயிலில் முடிகிறது. இந்த வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து விடலாம். ஆனால் இந்த வாழ்க்கையில் சமூகத்திற்கான தேடலாகவும் சமூகத்திற்கான பார்வையாகவும் வாழ்ந்தவர்கள் எத்தனை பேர் என்று விரல் விட்டு எண்ணி விடலாம் நாங்கள் இன்றும் கண்ணால் பாராத கற்பனைப் பாத்திரங்கள் பற்றியும் கனவுலகு பற்றியும் பேசி மகிழ்கின்றோம் அல்லாது பெருமை கொள்கின்றோம். கர்ணன் என்றும் பாரி என்றும் கண்ணால் காணாத கதாபாத்திரங்கள் பற்றி எத்தனை காலம் தான் பேசப் போகின்றோம் அல்லது எழுதப் போகின்றோம். எம்முடைய நிஜ வாழ்வில் எத்தனை கர்ணன்களும் பாரிகளும் வாழ்ந்து மடித்தார்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்? அவர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என நினைக்கின்றேன் அல்லது விரும்புகின்றேன்.

ஒரு செயல் வீரனாக கண்டிப்பு மிக்க அதிபராக கனிவான நண்பராக அவர் செய்த சில செய்கைகளினால் தெய்வத்திற்கும் மேலாக வாழ்ந்து இறைபதம் எய்திய எங்களின் அதிபர் திரு சிவபாதசுந்தரம் அவர்கள் பற்றியே ஒரு பார்வையாக இக்கட்டுரை அமைகின்றது. இந்த முறை "விக்கினேஸ்வரம்" சஞ்சிகையானது இவருடைய நினைவு நாளை ஒட்டி (14.07.1993) வருவதால் நாங்கள் வாழ்ந்த அனுபவங்களையும் அவருடைய திறமைகளையும் பற்றிக் சிந்திப்பது சிறப்பாக இருக்கும் என நினைக்கின்றேன். கற்பனையில் மூழ்கி முத்தெடுப்பதை விட நிஜத்தில் மண் எடுப்பது சிறப்பெனக் கருதுகின்றேன்.

1979ம் ஆண்டுகளில் எமது பாடசாலைக்கு ஒரு நிரந்தர அதிபர் இல்லாமல் திரு. "ஆட்டிஸ்ட்" சுப்ரமணியம் அவர்கள் தற்காலிக அதிபராகக் கடமையாற்றிய காலம். திடீரென எங்கள் காதுகளில் "சிவத்தார்" அதிபராக வருகிறாராம் என்ற செய்தி கிட்டியது. பிரபல கல்லூரிகளான ஸ்கந்தவரோதயா கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி என்பவற்றில் விலங்கியல் பாடத்திற்கு திறமை மிக்க ஆசிரியராகக் கடமையாற்றிவர். அவரது காலத்தில் எனக்குத் தெரிந்தவரை விலங்கியல் கற்பிப்பதற்கு அவரைப் போல திறமையான ஆசிரியர் இருந்ததாகத் தெரியவில்லை. தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்த ஒரு கல்வியாளன். அன்றைய காலங்களில் கொழும்பு வரை சென்று தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பித்த எனக்குத் தெரிந்த ஒரே ஒருவர் என்றால் அது எங்கள் அதிபர் திரு.சிவபாதசுந்தரமாகத் தான் இருக்க முடியும். நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, யாழ்ப்பாணம் என்று பட்டிதொட்டி எங்கும் பிரபலமான ஒரு விலங்கியல் ஆசிரியராகத் திகழ்ந்தார். அன்று நடிகர்களுக்குச் சுவரொட்டி ஒட்டுவது போல எங்கு பார்த்தாலும் பெரிய எழுத்துக்களில் "விலங்கியல் சிவபாதம்" என்ற சுவரொட்டிகளைக் கிடைக்கும். இத்தகைய பிரபலமான ஒருவர் எமது கல்லூரிக்கு அதிபராக வந்தது நாங்கள் செய்த தவம். எங்கள் கல்லூரிக்குக் கிடைத்த சிறப்பு என்றே சொல்லலாம்.

அதிபராக வந்த அன்றே எங்களுக்கு "நற்சிந்தனை" வழங்கினார். அன்றிலிருந்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒரு ஆசிரியர் "நற்சிந்தனை" வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அது வரை மேடையேறாத ஆசிரியர்களும் கூட மேடை ஏற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அது மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்குமே ஒரு களம் அமைத்துக் கொடுத்தாது என்றால் அது மிகையாகாது.

அயலில் இருந்த பாடசாலைகள் முன்மாதிரிப் பாடசாலையாகத் திகழ்ந்த காரணத்தினால் அரச சலுகைகள் நிறையவே கிடைக்கப்பெற்றன. எமது பாடசாலை ஒரு கிராமப் புறப்பாடசாலையாக இருந்ததாலும் அரச உதவிகள் அதிகம் கிட்டவில்லை அல்லது கிட்டவில்லை என்றே சொல்லலாம். எமது பாடசாலையின் அறியாமை இருள் அகற்றி மாணவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு விக்னேஸ்வரத்தாயின் முகத்தில் சிரிப்புவர என்ன செய்யலாம் என யோசித்தார். அவரது சிந்தனை செயல் வடிவமானது. "M.R" என்று அழைக்கப்பட்ட திரு M.இராசதுரை என்ற நண்பனின் உதவியோடு மின்னிணைப்புச் செய்தார். அதுவரை சிரிப்பே அறியாத எங்கள் விக்னேஸ்வரத்தாய் மெல்லத் தலை நிமிர்த்திப் புன்னகைத்தாள். அவளோடு நாங்களும் சேர்ந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினோம். பொதுவாக வீட்டுக்கு விளக்கேற்றுபவர் பெண் என்று சொல்வார்கள். அந்த வகையில் எங்கள் அதிபர் எங்களுக்குத் தாயானார்.

சமயப் பாடங்களில் நாங்கள், பசியால் வாடிய பன்றிக் குட்டிகளுக்கே சிவபெருமான் தாய்ப்பன்றியாக வந்து பசி தீர்த்ததாக கதையுண்டு. நாங்களும் எத்தனை காலம் தண்ணீர் குடிப்பதற்கு அந்த வேகாத வெயிலில் நீண்ட வரிசையில் காத்துக் கிடந்தோம். ஏறக்குறைய எழுநூறு மாணவர்களைக் கொண்ட எங்கள் கல்லூரிக்கு ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் இரண்டே இரண்டு தண்ணீர்க் குழாய்கள் மட்டுமே இருந்தது. மதியம் உணவு உண்ட பின் கை கழுவுவதற்கு முன் எங்கள் கைகளே உலர்ந்து விடும். யார் கண்டு கொண்டார்கள்? அட நஞ்சுண்ட சிவன் கூட மறந்து விட்டானே? ஆனால் எங்கள் "சிவம்" வேதனைப்பட்டது. ஆம் எங்கள் அதிபர் தாகம் தீர்க்க முனைந்தார். அது தீர கட்டையடியிலிருந்து வந்த உவர் தண்ணீர் குடித்து வந்த எங்களுக்கு நல்ல தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று சிந்தித்தார். அவரது சிந்தனை செயல் வடிவமானது. மீண்டும் அவரது இன்னோர் நண்பன் மறைந்த திரு "குளோபல் பாலா" என்ற பாலசுப்ரமணியம் என்பவரின் உதவியோடு நுகவில் வயல்வெளியில் நீண்டு நிமிர்ந்த தண்ணீர்த் தாங்கியும் தேவையானளவு தண்ணீர்க் குழாய்களும் கிடைத்தன. அப்போது எங்கள் கல்லூரியின் ஆசிரியர் திரு யோகராஜா அவர்கள் சிவம் மாஸ்ரர் மீது ஒரு கவிபாடினார்...

"குடி தண்ணீர் பெற்றிடவே குதிக்கா்லில் நின்று அவர்
அரும்பாடு பட்டு வந்தாரே – எங்கள்
நேர்மையுள்ள சிவம் மாஸ்ரர்
காலை எழுந்து விட்டால் கடமைதனைச் செய்திடுவார்
கவலை ஏதும் கொள்ள மாட்டாரே – எங்கள்
நேர்மையுள்ள சிவம் மாஸ்ரர்"

என்ற அது இப்போதும்..
எவ்வளவு பசுமையான இனிமையான நிகழ்வாக இருக்கிறது. இத்தகைய செயற்றிறனும் அசாத்திய துணிச்சலுமிக்க ஒரு அதிபராகவே எங்கள் சிவம் மாஸ்ரர் வாழ்ந்தார். இவரை

மீட்டும்போது தான் எத்தனை இன்பம் எத்தனை இனிமை. ஓடி விளையாடு பாப்பா... நீ ஓய்ந்து இருக்கலாகாது பாப்பா" என்று பாடினார் பாரதி. எங்களுக்கும் ஓடத்தான் ஆசை. விளையாடத்தான் ஆசை. ஆனால் ஒரு குறுகிய நிலப்பரப்புத்தானே மைதானமாக இருந்தது. விளையாட்டுத்துறையிலும் கல்லூரி சிறப்புற விளங்கவேண்டுமாயின் சிறந்த மைதானம் அவசியம். அதற்கு என்ன செய்யலாம் என்று அதற்கான வேலைப்பாடுகள் தொடங்கின. அதிபர் அவர்களது நண்பர் திரு கனகசபை (KKS) என்பவராம் அவரது உதவியுடனும், கலை விழா ஒன்றை ஏற்பாடு செய்து அதன் மூலமும் வருகின்ற நிதியையும் சேர்த்து மைதான விஸ்தரிப்புச் செய்வது என்று ஏற்பாடானது. இந்தக் கலை விழா கல்லூரி மாணவர்களாலேயே நடாத்தப்பட்டது. அன்று எங்களுக்கு நாடகம் பழக்கியதிலிருந்து சமையல் செய்தது வரை அவரது பங்கு அளப்பரியது. மைதானம் விசாலமானது. அதனால் மென்பந்து, உதைபந்து, கைப்பந்து வலைப்பந்து, கிளித்தட்டு என்று அனைத்து விளையாட்டுகளிலும் எமது கல்லூரி மாவட்ட, தேசிய ரீதியாகச் சிறந்து விளங்கியது. இதற்குக் காரணம் எங்கள் அதிபர். அனைத்துத் துறைகளிலும் தேர்ச்சி பெற்றவராக இருந்ததும் மாணவர்களது உழைப்பும் அதைவிட விளையாட்டுத்துறையில் எமது கிராமத்தவர்களான ஒரு வேதாபரணம், திரு பகீர் போன்றவர்களது உழைப்பும் அளப்பரியது.

சிலர் வயல் கோபுரம் கட்டுவார்கள் சிலர் செயற்பாட்டால் கோபுரம் கட்டுவார்கள். இதில் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர் எங்கள் அதிபர். எங்கள் பாடசாலைக்கு அவசியம் என்றால் அதிகாரத்திற்கு உட்பட்டும் அதிகாரத்தை மீறியும் செயற்படுவார். யாருக்கும் பயப்பட்டதாகவோ பணிந்ததாகவோ நான் அறிந்ததில்லை. அன்றைய காலத்தில் கல்வியதிபதிகளாக இருந்த திரு சுந்தரலிங்கம் இவரது நெருங்கிய நண்பர். திரு. சபாநாயகம் இவரது நெருங்கிய உறவினர். இவர்கள் மூலமாக நல்ல திறமை வாய்ந்த ஆசிரியர்களைத் தருவித்து க.பொ.த. சாதரண உயரதரப் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற வைத்ததோடு, மருத்துவம், முகாமைத்துவம், தொழில்நுட்பவியல், பொறியியல் என்று மாணவர்கள் பல்கலைக்கழகம் போகவும் காரணமாக இருந்தார். மொட்டைக் கழுத்துடன் திரிந்த மாணவிகளுக்கு ரை கட்டி அழகு பார்த்தார். மாணவர்கள் எல்லோரும் வெள்ளை மேலங்கி அணிவதோடு மேலங்கிகளை காற்சட்டைக்குள் விடவேண்டும் என்று கண்டிப்பாகச் சொன்னார். மீறுபவர்கள் தண்டனையும் பெற்றனர். அதிபர் அவர்கள் நினைத்திருந்தால் தனியார் கல்வி மூலம் அதிக பணம் ஈட்டி பெரிய தனவந்தகராக வாழ்ந்திருக்க முடியும். ஆனால் அதைவிட அவருக்கு சமூகம் மீதான பிடிப்பே அதிகமாக இருந்தது. அதனால் தனியார் கல்வி நிலையங்களை ஒதுக்கி வைத்து விட்டு எங்கள் கல்லூரியோடு ஒன்றித்து விட்டார். பாடசாலை நேரங்களில் கண்டிப்பு மிக்க அதிபராக இருந்த போதும் மாலை நேரங்களில் எங்களோடு நண்பனைப் போலப் பழகுவார். ஒரு தந்தையைப் போல அறிவுரை கூறுவார். ஆக மொத்தத்தில் ஒரு நல்ல மனித நேயம் மிக்க மனிதனாக பேச்சளவில் மட்டுமன்றி செய்கையிலும் செய்து காட்டிருந்தார். என்னைப் பொறுத்தவரை கிமு, கிபி என்பது போல அதிபர் சிவபா சுந்தரம் அவர்களுக்கு முன், பின் என்று இரு காலங்கள் எமது கல்லூரிக்குண்டு. சிவம் மாஸ்டர் அதிபராக இருந்த காலம் "பொற்காலம்" என்றே சொல்வேன்.

இறுதியாக ஓய்வூதியம் கிடைத்த பின்பும் பாடசாலையுடனான அவரது தொடர்பு குறையவில்லை. இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுத்தார். பாடசாலையில் அதிக அக்கறை கொண்டிருந்தார். "பவள விழா" கொண்டாட வேண்டும் என்பதில் மிகவும்

ஆவலாக இருந்தார். அயற் பாடசாலையில் கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும்போது திடீரென மௌனமாகி விட்டார். ஓயாமல் கற்பித்த வாயும் அவரது செயற்பாடுகளும் மௌனமாகி விட்டன. நண்பன் ரஜீவ் இந்தச் செய்தியைச் சொன்னபோது நானும் மௌனமாகி விட்டேன். என்ன கதைப்பது என்ன பேசுவது என்று தெரியவில்லை. ஏனெனில் சிவம் மாஸ்வர் என்ற பட்டறையில் மேடைப்பேச்சு, நாடகம், விளையாட்டு, நிகழ்ச்சித் தொகுப்பு என்று பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன். நான் சர்வகலாசாலை செல்லாது டினும் ஒரு முழுமனிதனாகவே பாடசாலையை விட்டு வெளியேறினேன் என்பதில் ஐயமில்லை.

பாடசாலையைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் ஸ்கூட்டர் சத்தமும் சிவம் மாஸ்ரரும் அடிக்கடி நினைவில் வருவார்கள். அமரரின் இறுதி மரியாதையின் போது அயற்பாடசாலை மாணவி சொன்னது “சேர், நீங்கள் எங்களை இன்றைக்கு வீட்டை போக விடமாட்டேன். நாங்கள் நினைத்தாலும் போகமுடியாது என்று சொன்னீர்கள், ஆனால் நீங்கள் அவசரமாகப் போய் விட்டீர்களே”. அந்த வார்த்தை இப்போதும் என் கண்களை நிறைக்கின்றது. இந்தச் சிவம் பூவுலகில் இருந்து இப்படிச் செயற்பட்டால் ஆண்டவராகிய என்னை மக்கள் மறந்து விடுவார்களோ என்று எண்ணி சிவபெருமான் தன்னோடு அழைத்து கொண்டாரோ. ஆனாலும் நான், சிவம் மாஸ்ரருக்காக அழமாட்டேன். ஆனால் அழுவேன் எப்போது தெரியுமா - எமது பாடசாலை எமது மாணவர்கள், எமது ஊரவர்கள் எப்போது சிவம் மாஸ்ரர் செய்த சேவைகளை செயற்பாடுகளை அவரது அயராத உழைப்பினை மறக்கின்றார்களோ, அப்போது தான் நாம் எங்கள் சிவம் மாஸ்ரரை அதுவரை அவரது நிகழ்வுகளை நினைத்து அவர் எங்களோடு இருப்பதாகவே நினைத்து வாழ்வோம்.

வாழ்க எங்கள் கலைக் கல்லூரி
வளர்க சிவம் மாஸ்ரரின் நினைவுகள்

**நினைவுகளோடு**
**சின்னத்தம்பி கர்ணன்.**

வல்ல பெருமான்கள் அள்ளிவரம் தந்தருளும்
யாழ்கரவை வல்லூர் பெருமக்கள் - நல்ல
அமுதம் வளம் தொளிக்கும் வயல் வெளிகள்
வானுயர்ந்து படர்ந்து நிற்கும் பனைமரக்கூடல்கள்
அப்புக்கும் ஆச்சிக்கும் கொள்ளிக்கென விட்ட
பூவரச மரநிழல்கள் மழைக்கால வெள்ளம்
வடிந்து ஓடும் மணல் குச்சொழுங்கைகள்
பண்ணெடுத்துப்பாடும் பறவைகளின் குரலோசை
சுற்றவரச் சூழ்ந்திருக்கும் பல கடவுள் கோவில்களின்
அதிகாலை துயில் கலைக்கும் மணியோசை
தென்றலை உவர்க்க வைக்கும் உப்புக்காற்றும் உப்பளவெளியும்
இயற்கையால் வலம் வரும் கரவையூர்
உடையார்கள் முதற்கொண்டு மணியகாரர்வரை
மாட்ச்சிமை செலுத்திய மானஸ்தர்களின் கரவை
பள்ளிப்புத்தகமும் மேன்மை தங்கிய ஜனாதிபதி
உருகி கொடுத்த இலவச சீருடையும்
நம் எல்லோருக்கும் உரிய சொத்தாயிற்று
அறிவை வளர்க்கும் கல்லூரிகளும் வாழ்வை
அளிக்கும் கடவுளரும் நமதே நமக்கெனவை
ஓடும் உதிரத்திலும் வடிந்தொழுகும் கண்ணீரிலும்
தொட்டுப்பார்த்தாலும் மணந்த பார்த்தாலும் தமிழ்தான்
அதுவே தமிழ் இனத்தில் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றிக்கு
நன்றே நம்வாழ்வு சிறக்க நாம் தமிழர் என்போம்
இன்னார் ஒருவருக்கு நன்னயம் நல்வாழ்த்து கிடைக்கினும்
இன்னல் பட்ட தமிழை மறந்திடல் ஆகாது
கடநீர் வடிந்து சேடம் இழுத்து கிடக்கிறது இங்கொர் மனிதம்
ஆடை இழந்து தெருப்பிணமாய் கிடக்கிறது அங்கோர் மனிதம்
எவர்செய்த பாவம் இல்லை யார் செய்த மோசம்
பட்டினி கிடந்து பசியால் துடித்த தமிழ் எப்படி
சொல்லிற்கு கடவுள் என்னை கைவிடவில்லை என்று
பெற்ற வரமும் பெறாத வரமும் எம்மை ஆட்டுகின்றதா?
எங்கள் கைகள் ஒன்றாகையில் அதுவே நம் தெய்வமாகும்
எங்கள் ரோசம் எங்களுக்கான வீர அடையாளம்
கரவையூர் மக்காள் நாம் மக்களாய் வாழ்வோம்
மானிடத்தின் பெருமைதனை மாற்றார்க்கு எடுத்துரைப்போம்!

**சிவா**

# My favorite Country!

I went to Srilanka in a airoplane. I got of the airoplane and someone picked us up and droped us at my mum's auntys house. We went to sleep and in the morning we went to the fun fair. Srilanka is a very small and very hot country. It's my mums and dads birth place in the northen part of Srilanka. Called jaffner. jaffener is town is my dads place. Caraveddy is my mums place. We ~~aunty~~ Went to my mums auntys house. My mum lived in that house. The house was in the middle of the farm. In the farm there is banana tree, coconut tree, mango tree, jackfruit plant and papaya. The flowers smell lovely and its a lovely colour there is different colour like yellow, red, white and pink. Our relatives are very kind to us. They got fresh food and fresh vegetable and fish. The vegetable was grown from their garden. We eat food on a big banana leave. The middle of the farm we got a very small temple. We go and pray there.

After we went to trancomalee. trancomalee is a seaside. We go to the beach when it es hot. We went to have a swim in the sea. And go to temples after. The temple is called Thriukoneswaram and Kenya. There are seven hot well water. We had a bath in the seven hot wells. The next day we went to see kandy there is very beautiful elephant and garden. The elephant was with their babys. The next day we went to the zoo. They had a bath they dance. When I was a baby they picked me up. We went to up country side to nuwaraliya It was a very cold place (country) There is very plenty of tea estate and rubber. When I was little I went to the forest I saw goats, rabbits, elephant, dear and monkeys. I love Srilanka Its my favorite country. Written kajani piranavananada.

உ

# புறப்படு

என்று முதல்
ஏர்க்குத் தடியோடும் எந்திரங்களோடும்
இருந்து விட்ட காலம்
இனியும் வேண்டாம் ----!

பளிச்சிடவை
பாத்திரங்களை மட்டுமல்ல
மூழ்கிப் போன - என்
மூளையையும்

துப்பரவு செய்
என் வீட்டை மட்டுமல்ல
கறைக்காமல் இருக்கும் - என்
உள்ள மனதையும்

புறப்படு!
போருக்கல்ல
பல மேதைகளை உருவாக்கும்
புனித கல்விச் சாலைக்கு.

## எமது போசாக்கை நாமே பாதுகாப்போம்

* சிறுவர்களாகிய நாம் வளர்ந்து வரும் காலங்களில் எமது போசாக்கை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டியவர்களாகிறோம். எமது அன்றாட வேலைகளை செய்வதற்கும், சக்தியை பெறுவதற்கும், உடலை நோய்களிலிருந்து பாதுகாக்கவும் ஏற்ற நல்ல போஷாக்கான உணவு தேவை. அவ்வாறு எமக்கு உணவின் மூலம் போஷாக்கான உணவு கிடைக்காவிடின் போசாக்கு குறைபாட்டு நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பம் உண்டு. இதனை தவிர்ப்பதற்கு நாம் பிரதான வேளை உணவுகளையும், இடைவேளை உணவுகளையும் சரியான முறையில் போசாக்கு கூறுகளை தெரிவு செய்து உள்ளெடுத்தல் வேண்டும்.

நல்ல உணவு வகைகளை தெரிவு செய்யும்போது அவை சந்தையிலே வாங்கியதாகவோ அல்லது வீட்டுத் தோட்டத்தில் பெற்றதாகவோ இருக்கலாம். ஆனால் அது உடனடியாக பெற்றதாக அதாவது புத்தம் புதிய உணவாகவும் இருத்தல் வேண்டும். மாறாக பழைய உணவாக இருப்பின் அவற்றில் பங்கசு தாக்கம், எறும்பு மொய்த்தல், தூசு படிதல், சுவையூட்டி என்பன பயன்படுத்தியிருத்தல் வேண்டும். இவை மூலம் பழுதடைந்த உணவை நாம் உட்கொள்ளக்கூடாது.

உணவு கூறுகள் தெரிவு செய்வதில் இருந்து சமைக்கும் வரை ஒவ்வொரு படிகளிலும் எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது பற்றியும் என்பதை நாம் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். இவற்றை தெரிவு செய்யும்போது விலை குறைவாகவும் போசாக்கு பங்குகள் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். நாளாந்தம் எமது உடலுக்கு தேவையான போசாக்கு கூறுகள் இருத்தல் வேண்டும். இலகுவான முறையில் பெறக்கூடியதாகவும் இருத்தல் நன்று. சமைக்கும் முன் கவனிக்க வேண்டியவையாக நன்கு கை கழுவுதல், அலுமினிய பாத்திரத்தில் சமைப்பதை தவிர்த்தல் என்பனவாகும். சமைக்கும் போது மூடி சமைத்தல், அயடீன் உப்பை இறக்கி ஆறிய பின் கறிகளில் இடல், கீரையை இறக்கி ஆறிய பின் தேசிப்புளி விடுதல், நன்கு அவிய விடல் என்பன கவனத்தில் கொள்ள வேண்டியவை. சமைத்த பின் மூடி வைத்தல் வேண்டும். ...

எமது உடலுக்கு சக்தியை வழங்குவதற்கு உடற்கலங்களின் வளர்ச்சிக்கும் அவை சேர்வதற்கும் நிறைய காபோவைதரேற்று, புரதம், கனியுப்பு என்பன தேவைப்படும். மாப்பொருளாக தானியங்கள், கிழங்கு வகைகள் என்பன உள்ளடங்கும். புரதங்களாவன மீன், இறைச்சி, பருப்பு, கருவாடு என்பன ஆகும். விற்றமின்களில் விற்றமின் A, விற்றமின் B, விற்றமின் C, விற்றமின் D என்பன உள்ளடங்கும், கொழுப்புக்களில் வெண்ணெய், பாற்கட்டி என்பனவும் இரும்புச் சத்தில் இறைச்சி, ஈரல் என்பனவும் சுயமீனில் அயடீன் கலந்த உப்பு உள்ளடங்கும்.

இவ்வாறு போசாக்கான உணவை உண்ணும்போது நாம் தெரிவு செய்து உண்ணப்பழக வேண்டும். இதில் போஷாக்கு நிறைவானவர்கள் எவ்வாறு உண்ண வேண்டும் என்பதை நாம் பார்த்து உண்பது சிறந்தது. இதற்கு நாம் உடற்திணிவுச் சுட்டி என்பதை பயன்படுத்தலாம். இது எமக்கு ஒவ்வொருவருக்கும் உடல் திணிவுச் சுட்டி அளக்க எமக்கு உதவிபுரிகிறது. அதாவது எமது உடல் சீரானதா என்பதை பரீட்சிக்க உடற்திணிவுச்சுட்டி பயன்படுகிறது. அதாவது உயரம், நிறை ஆகியவற்றின் மூலம் பெறும் ஒரு அளவு உடற்திணிவுச் சுட்டெனப்படும். எமது உயரத்திற்கேற்ப நிறையின் அளவை நாம் கணித்து சமப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதன்படி நிறைகுறைவானவர் எண்ணெய்ச்சத்து, மாச்சத்து, புரதச்சத்து என்பவற்றை ~~இவை~~ கூடுதலான அளவிலும் நிறை கூடியவர்கள் சீனிச்சத்து, கொழுப்புச்சத்து என்பவற்றை குறைவான அளவில் உள்ளெடுத்தல் அவசியம். அவ்வாறு எம் பழக்கத்தை நாம் கவனித்து இல்லாவிடின் எமது இனிவரும் காலங்களில் எமக்கு நோய் வாய்ப்படும் சந்தர்ப்பம் ஏற்படும். போஷாக்கு குறைபாட்டால் மூளை மந்தமடைந்து கல்வியை தொடர முடியாதிருக்கும். குருதி அமுக்கம், சலரோகம், இருதய நோய் என்னும் பல நோய்கள் உருவாகும் சந்தர்ப்பம் ஏற்படும்.

எமது உடலுக்கு சக்தியை வழங்குவதற்கு உடற்கலங்களின் வளர்ச்சிக்கும் அதை சேர்ப்பதற்கும் நிறைவேற்ற காபோவைதரேற், புரதம், கனியுப்பு என்பன தேவைப்படும். மாப்பொருளாக தானியங்கள், கிழங்கு வகைகள் என்பன உள்ளடங்கும். புரதங்களாவன மீன், இறைச்சி, பருப்பு, கருவாடு என்பன ஆகும். விற்றமின்களில் விற்றமின் A, விற்றமின் B, விற்றமின் C, விற்றமின் D என்பன உள்ளடங்கும். கொழுப்புக்களில் வெண்ணெய், பாற்கட்டி என்பனவும் இரும்புச் சத்தில் இறைச்சி, ஈரல் என்பனவும் அயடீனில் அயடீன் கலந்த உப்பு உள்ளடங்கும்.

இவ்வாறு போசாக்கான உணவை உண்ணும்போது நாம் தெரிவு செய்து உண்ணப்படுதல் வேண்டும். இதில் பொதுவாக நிறைவானவர்கள் எவ்வாறு உண்ண வேண்டும் என்பதை நாம் அறிந்து உண்பது சிறந்தது. இதற்கு நாம் ஒரு உடற்திணிவுச் சுட்டி என்பதை பயன்படுத்துகின்றோம். ~~இது~~ எமக்கு ஒவ்வொருவருக்கும் உடல் திணிவுச் சுட்டி அளக்க எமக்கு உதவிபுரிகிறது. அதாவது எமது உடல் சீராக உள்ளதா என்பதை பரீட்சிக்க உடற்திணிவுச்சுட்டி பயன்படுகிறது. அதாவது உயரம், நிறை ஆகியவற்றின் மூலம் பெறும் ஒரு அளவீடு உடற்திணிவுச் சுட்டெனப்படும். எமது உயரத்திற்கேற்ப நிறையின் அளவை நாம் கணித்து சமப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதன்படி நிறைகுறைவானவர் எண்ணெய்ச்சத்து, மாச்சத்து, புரதச்சத்து என்பவற்றை ~~இவை~~ கூடுதலான அளவிலும் நிறை கூடியவர்கள் சீனிச்சத்து, கொழுப்புச்சத்து என்பவற்றை குறைவான அளவில் உள்ளெடுத்தல் அவசியம். இவ்வாறு எம் பழக்கத்தை நாம் கவனிக்காவிடின் எமது இனிவரும் காலங்களில் எமக்கு நோய் வாய்ப்படும் சந்தர்ப்பம் ஏற்படும். பொதுவாக நிறைபாட்டால் மூளை மந்தமடைந்து கல்வியை தொடர முடியாதிருக்கும். குருதி அழுத்தம், சலரோகம், இருதய நோய் என்னும் பலநோய்கள் உருவாகும் சந்தர்ப்பம் ஏற்படும்.

* அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவாறு நாம் போசணைப் பதார்த்தம் அதிகம் கொண்ட உணவுகளை நாம் உண்ண வேண்டும். நாம் உண்ணும் உணவு காரணமாக நமக்கு பல்வேறு போசணை பிரச்சனைகள் ஏற்படுகின்றன. உணவு காரணமாக நாம் நோய் வாய்ப்படலாகாது. குறையூட்டம், மிகையூட்டம் ஆகியன தற்போது காணப்படும் பிரதான இரண்டு போசணை பிரச்சனைகள் ஆகும். நாம் அன்றாடம் உடலுக்கு தேவையான அளவிலும் கூடுதலான அளவு உணவை உட்கொள்வதால் எங்கள் உடலின் பருமன் அதிகரிக்கும். இது உடல் பருத்தல் எனப்படும்.

அதிகம் பருத்த உடலை ஆரோக்கியமானதாக கருதமுடியாது. அதிகம் பருத்த உடலை கொண் உட்கொள்ளும் உணவின் அளவை குறைக்க வேண்டும். உடற்பயிற்சி செய்தல் வேண்டும். உணவுடன் கூடுதலான அளவு காய்கறிகளையும், பழங்களையும் சேர்த்து கொள்ள வேண்டும். கொழுப்பு, சீனி, உப்பு போன்றவை அடங்கியுள்ள உணவுகளை உண்பதை தவிர்க்க வேண்டும். எனவே நாம் போஷாக்கான உணவை திட்டமிட்டு ஒருநாளுக்கு தேவையான அளவின்படி உட்கொள்ளல் வேண்டும். நாம் எமது போஷாக்கை கடைப்பிடித்து நற்பிரஜையாக வாழ்வோமாக

ஆக்கம்
ப.கஜோரா
07 B
யா/விக்னேஸ்வராக்கல்லூரி
கரவெட்டி.

# வெற்றிப்பயணத்தை நோக்கி -------

"பெற்ற தாய், பிறந்த பொன்னாடு, கற்ற கல்லூரி இவை தரு ஆனந்தம் என்பன நெஞ்சத்தில் என்றும் நிலைத்து நிற்கும் நினைவுப் பொக்கிஷங்கள். புண்ணியம் கோடி இலவசமாய் எழுத்தறிவித்தலாகும்.
உண்மைக்கும் பொய்மைக்கும் இடையேயான மயக்கம் நிறைந்த வாழ்வியலில் உண்மையைத் தேடிப் பிடிக்க உதவுவது கல்விப் பேறேயாகும்.
இப்பெரும் பேற்றினை கடந்த தொண்ணூற்றி இரண்டு ஆண்டுகளாக விக்னேஸ்வரா பாரியென வாரி வழங்கி வருகின்றது. எமது கல்லூரி மாணவர்களிற்குப் புத்தகங்களை மாத்திரம் போதிக்கும் ஒன்றல்ல. மாணவர்களைப் பண்பும் பயனுமுள்ளவர்களாக்கி சிறந்த நல்வாழ்விற்கும் மேம்பாட்டிற்குமாக மிகவும் கடினமான சூழ்நிலையில் இடையூறற்ற பணியை ஆற்றி வருகின்றது.
அராலியூர் முதலியார் அமரர் வீரவாகு சிற்றம்பலம் அவர்களால் 1917 இல் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் போது பனை, வடலி வளவில் கிடுகுக் கொட்டிலாகவே அமைக்கப்பட்ட இக் கல்லூரி இன்று சகல துறைகளிலும் பல சாதனைகளைப் புரிந்து அறிவாலயமாக மிளிர்கின்றது. தொழிற் கூடம், விஞ்ஞான கூடம், மனையியற் கூடம், கவின் கலைக் கூடம் முதலிய கலைக் கூடங்களையும் கொண்டு பெரியதோர் கல்லூரியாக வளர்ந்து விட்டது. வளமுமோ வனப்பாமாகி வனப்பு மிக்கதாக ஆகி விட்டது. இதன் வளர்ச்சிக்குத் தாபகர் சிற்றம்பல மணியக்காரன் தொடக்கம் அவரது சந்ததியினர், பல பெரியார்கள், கல்வி மான்கள், நிர்வாகிகள் பொருட்தானம், அருட் தானம், சிரமதானம் செய்துள்ளனர். இவர்கள் சேவை பற்றிக் கூற மகாகவி பாரதியாரின் :

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற அடிகளே ஞாபகம் வருகின்றது. எத்தனையோ ஆற்றிய இப்பெரியாரின் சேவை போற்றிப் பாராட்டுதற்குரியதே. நயமாகத் தொண்டு புரிந்த பண்புடையாளர் பண்பும் பாராட்டுதற்குரியதே.

களின் பெறு இக் கல்லூரியின் முதல் முதல் அதிபராக [நவிண்டில்] கரவெட்டி அடக்கைச் சார்ந்த சின்னத்தம்பி சபாபதிப்பிள்ளை அவர்கள் பதவியேற்றார். கல்லூரியின் காலத்தில் கட்டிடங்களை அமைத்ததிலும் இவர் பங்காற்றியுள்ளார். பின்னர் 1920 இல் ஸ்தாபகர் இந்த மணியத்தின் மைத்துனர் கந்தப்பு சின்னத்தம்பி முறைப்படியான அதிபராக கடமையேற்றார். இவர் காலத்தில் அரசாங்கத்திலிருந்து பெறப்பட்ட நன்கொடைத் தொகைப்பணம் ஆசிரியர் வேதனங்களாகவும், கட்டிட தளபாட அபிவிருத்திக்காகவும் நன்கு பயன்படுத்தப்பட்டன. இக்கோலமாக கல்லூரி உறுதியான கல்வி செயற்பாட்டு நிலையை எய்தத் தொடங்கியது. 1920 இல் ஆங்கிலப் பாடசாலையாக இது அரசினால் பதிவு செய்யப்பட்டது.

அடுத்து அதிபராக நவிண்டிலைச் சேர்ந்த ஸ்ரீ. தி. திருவிளங்கம்பிள்ளை B.A அவர்கள் அமர்த்தப்பட்டார். அவர்கள் முழுநேர ஆசிரியராக கடமையாற்றியதோடு பாடசாலையை விட்டு விலகி கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபராக சென்ற பின்பும் ஓய்வு நேரங்களில் உயர்தர மாணவர்களை தன் இல்லத்திற்கழைத்து Cambridge/ Senior பரீட்சைக்கு பயிற்றுவித்து சித்தி பெறச் செய்ததும் இங்கு பெறக் கூடிய முக்கிய விடயம்.

இரண்டாவது அதிபராக தென்னிந்தியாவைச் சேர்ந்த நா. தி. இராமசாமி பதவியேற்றார். இவர் காலத்தில் E.S.L.C/S.S.L.C வகுப்புகளில் மாணவர் தொகை அதிகரித்தது.

1928 இல் திரு தி. அச்சுதம்பிள்ளை அதிபராக நியமிக்கப்பட்டார். இக்கால -கட்டத்தில் London matriculation பரீட்சைக்கு மாணவர் தோற்ற வழி -வகுக்கப்பட்டது. 1930 இல் அப்போதைய ஆசிரியர் ஞானதேவன் பிள்ளை அவர்களை காப்பாளராக கொண்ட "பாரதமன்றம்" ஒன்றும் ஆரம்பிக்கப் -பட்டது.

1943 இல் க. சு. பத்மநாதபிள்ளை அதிபராக கடமையேற்றார். மாணவர் தொகை அதிகரிக்க மேலும் பல பட்டதாரி ஆசிரியர்கள் கல்லூரிக்கு நியமனம் பெற்றனர். பின்னர் 1949 இல் நா. சிவப்பிரகாசம் B.A அவர்கள் அதிபராக பதவியேற்றார். இப்பணியை சிறப்பாக கொண்ட இவர் அதிபர் சேவையை திறம்பட செய்து 1964 இல் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

1953 இல் க. ந. நடராசா Bar-at-Law முகாமையாளராகவும், சிவப்பிரகாசம் அதிபராகவும் இணைந்து கல்லூரியின் வளர்ச்சியை திறம்பட வழிநடத்திச் சென்றனர். 1964 இல் சோமசுந்தரம் B.Sc அதிபர் சேவையாளராக அமர்த்தப்பட்டார். சிவப்பிரகாசம் அதிபர் காலத்தில் வளர்ச்சி பெற்ற

1971 இல் பண்டிதமணி பொன் கனகநாதன் B.A. அவர்கள் அதிபரானார். இவர் காலத்தில் கலைக் கல்லூரிக்குரிய இடம் வழங்கப்பட்டது. திரு. சி. சந்திரசேகரம் பிள்ளை வடமாநிலக் கல்வி அதிகாரியாக இருந்த போது றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மூடப்பட்டு அங்கிருந்த ஆசிரியர்களும் மாணவர்கள் விக்னேஸ்வராக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டனர்.

1976 இல் திரு. வி. தர்மராஜா B.A. Dip.in.Edu. அதிபராகப் பதவியேற்றார். கல்லூரியில் இவரால் தொடர்ந்து நிலைபெற முடியாத காரணத்தால் 1977 இல் கல்வி அதிகாரியாக உயர்வு பெற்றுக் கல்லூரியை விட்டு விலகினார். இவரது சேவையை தொடர்ந்து த. நமசிவாயம் அதிபர் பதவியைப் பொறுப்புடன் ஏற்றுக்கொண்டார். பௌதிகவியலும், கணிதமும் இவரது சிறப்புப் பாடங்களாகும். 1977.02.16 இல் அதிபர் த. நமசிவாயம் காலத்தில் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கிய கல்லூரி 1979 இல் இவரது வெளிநாட்டுப் பயணம் காரணமாக கண்ணீர் விட்டது.

பின் திரு. அ. சுப்பிரமணியம் அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்து 1980 இல் சிவபாதசுந்தரம் அதிபரால் பதவி ஏற்கப்பட்டது. இவர் குடாநாட்டிலே பிரசித்தி பெற்ற ஓர் விஞ்ஞான ஆசிரியர். A/L விஞ்ஞானப் பாட போதனாசிரியராகவும், வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சின் A/L விஞ்ஞானப் பாட ஆசிரியர் ஆலோசனைக் குழுவாளராகவும் நியமிக்கப்பட்டவர். கல்லூரியினை மேம்படுத்த முழுநேரமும் உழைத்த திரு. சிவபாதசுந்தரம் அதிபர் அவர்கள் 90ம் ஆண்டில் தன் 56 வயதில் ஓய்வு பெற்றார்.

1990 இல் கன்னாலையைச் சேர்ந்த தி. ஜெயநாதன் துணை அதிபராக பதவியேற்றார். 1961 இல் இக் கல்லூரியில் முதல் நியமனம் பெற்றவர். 1990 இல் வி. செல்வராஜா B.Com. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக பதவியாற்றிய இவர் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தவிர்க்க முடியாத இவரது பதவி விலகல் காரணமாக 1993 நடுப்பகுதியளவில் திரு. க. சிதம்பரநாதன் அவர்கள் பதவி ஏற்றார். இவர் காலத்தில் ஏற்பட்ட புகழ் இன்றுவரை நிலைத்திருக்கின்றது என்னலாம். பல வருடங்கள் தன் தாய் புகழ் மங்காது பேணி 2002 நடுப்பகுதியளவில் கோட்டக்கல்வி அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்றார்.

இதன் காரணமாக பிறரால் வாட்டம் போல் எமக்கு கிடைத்த பேராளன் தான் எங்கள் அதிபர் திரு. சிவசிதம்பரம். எம் கல்லூரி இன்று எத்தனையோ மன்னாரிப் பாடசாலைக்கு எதிர்க்க சமனாய் தலை நிமிர்ந்து நிற்கின்றதென்றால் அதற்கு காரண கர்த்தாவும் இவரே. எம் கல்லூரிக்கு கிடைக்கும் ஒவ்வொரு வெற்றிக்கும் எம் [illegible]

இவ்வாலயத்தில் எண்ணும் எழுத்தும் கற்பித்த ஆசிரியர்கள் பலர் எங்கள் மனதில் இன்றும் அவர்கள் ஒரு தெய்வமாக இருக்கிறார்கள். எம்மை நல்வழிப்படுத்தி வாழவைக்கும் பெருமையும் அவர்களையே சாரும். கணிதம், தமிழ், ஆங்கிலம், இலக்கியம், விஞ்ஞானம் முதலிய பாடங்களிற்குப் பெயர் பெற்ற ஆசிரியர்கள் கற்பித்து புகழ்பூத்த வைத்த காலங்கள் பல. இவ்வாசிரியர்களையும் அவர்கள் சேவையையும் நினைக்கும் போது காலை விக்னேஸ்வராக் கல்லூரி எங்கள் கல்லூரி என்ற உணர்வும் ஓர் அன்னியோன்னியமான பாசமுமே மிஞ்சுகின்றது. இன்று வடமராட்சியின் பள்ளிகளில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஓர் கல்லூரியாகவும் எம் கல்லூரி மிளிர்கின்றது.

இன்று இவள் நிம்மதி

ஒளிவீசும் காலம். அறிவுச்சுடர் தண்ணொளி பரப்பும் காலம். நாட்டிலே புதிய வேகம். மக்கள் மனதிலே புதிய மோகம் எங்கும் எழுச்சி. ஆனால் மக்கள் மனதிலே மாறாத கிளர்ச்சி. முன்னேற்றவாதிகள் முறுக்குடன் முன்னேறும் போது தன்னலம்கொண்ட சில தமிழ்த் தலைவர்கள் தமிழரை மறந்து சிங்களவருடன் சேர்ந்து கூத்தாடுகின்றார்கள். சில தமிழ்த் தலைவர்களாலே தமிழன் வஞ்சிக்கப்பட்டான். அதனால் தமிழர்களுக்கான கல்வி அரசாங்கத்தால் திட்டமிடப்பட்ட முறையால் நசுக்கப்பட்டு வந்தது. இன்று தமிழர்கள் தமது தேவைகளை தாமே நிவர்த்தி செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். கல்விச் சேவையை தொடர்ந்து ஆற்ற தமிழ்ப் பாடசாலைகள் எதிர்நோக்கிய முக்கிய பிரச்சனை நிதி. விக்னேஸ்வராக் கல்லூரியும் இதற்கு விதிவிலக்கில்லை.

“கற்றாரை கற்றாரே காமுறுவர்” என்பது போல எமது பிரச்சனைகளை அறிந்து அருங்கொடை உதவியளித்த பெருமை திருமதி. அம்பாப்பிள்ளை - [நன்னீர்க் கிணறு, நீர்த்தாங்கி மைதான நிலம் வழங்கினார்] திரு. பாலசுப்பிரமணியம் - [புதிய தண்ணீர் விநியோகத் திட்டம்.] திரு. பாஸ்கரன் - [புலமைப் பரிசில் நிதி], திரு. கனகசபை - [மைதான விரிவு] திரு. கந்தசாமி - [நீர் விநியோகம்] திரு. இராசதுரை - [மின் விநியோகம்] திரு. சிதம்பரநாதன் - [இரும்பு கேற்றை வழங்கியவர்] திருமதி. சுப்பிரமணியம் - [பெயர் பொறிக்கப்பட்ட வளைவு வழங்கியவர்] போன்றோரையே சாரும். அந்நிய ஐரோப்பிய ஆட்சிக் காலத்தில் எமது தேசப்பண்பாட்டையும், மதத்தையும் புறக்கணிக்கப்பட்ட நிலையால் கல்லூரியின் அயராத உழைப்பில் கண்ட வெற்றி மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் என்று

விக்னேஸ்வராக் கல்லூரி ஈன்றெடுத்த மக்கள் உயர் உத்தியோகங்களில் [பொறியியலாளர்கள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், அரசாங்க அதிபர்கள், கல்விப்பணிப்பாளர்கள், நீதித்துறையாளர்கள், எழுத்தாளர்கள்] வகிக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே. அவ்வாறு உயர் பதவியில் வகிக்கும் போதும் இடத்தை பெற்று முன்னேறி நிற்பதையோ, வாழும் ஊரை சிறப்பதையோ மறப்பதுமில்லை. எதற்காக அவர்கள் வெட்கப்படுவதுமில்லை.

ஆலயங்களில் பெருவிழாக் காலங்களில் கல்லூரி மாணவர்களின் தொண்டு மதிப்பிட முடியாது. இறைபணி செய்வதில் அவர்கள் பின்நிற்பதில்லை. இது "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் மனோபாவத்தை பெற உதவியது. கல்லூரி வாசலில் நுழையும் போதே சைவத்தின் மணம் வீசுகின்றது. சிங்கார வளைவு வரவேற்கின்றது. ஓங்கார வளைவிலே கல்லூரியின் பெயர் உயர்ந்து நிற்கிறது. ஆதார ஒலி அழைக்கின்றது. ஆரம்ப வகுப்பு முதல் சீனியர் வகுப்பு வரை சமயம் கற்ற பயன் தர்மமாய் நன்றுமாய் உருவாகியுள்ளது.

விக்னேஸ்வராவில் புதிய மாணவர் ஒருவர் சேர விரும்பினால் கல்லூரி நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். வட மாகாணத்திலே தனிப்பட்ட பண்பாட்டை உடையதாக எங்கள் கல்லூரி பிரகாசிக்கின்றது. புதிய ஆசிரியர் ஒருவர் கல்லூரியில் நுழையும் போது கல்லூரியின் பாரம்பரிய பண்பாட்டு நடைமுறையை ஏற்க வேண்டியவராவார். முகாமைத்துவக் கல்லூரியாக இருந்த காலத்திலும் சரி, அரசினர் கல்லூரியாக மாறிய காலத்திலும் சரி இந்நிலை தொடரும் பண்பாடாகவே உள்ளது. அதை இன்றும் கல்லூரி காப்பாற்றிக்கொண்டிருப்பதை நினைத்து பெருமையடைகிறேன். இதற்கு உதாரணமாக கல்லூரி வாசகங்கள் சைவ வாசகங்களாகவே உள்ளன.

"நல்ல கனி தரும் கெட்ட மரமும் இல்லை. கெட்ட கனிதரும் நல்ல மரமும் இல்லை". கெட்டதை கற்பிக்கும் நல்ல கல்லூரிகள் இல்லை. ஒரு சமுதாயத்தின் மலர்ச்சியும், வளர்ச்சியும் அதன் பாற்பட்ட அங்கமான கல்வி நிலையத்திலேயே தங்கியுள்ளது. அவ்வாறே அதன் வளர்ச்சி சமூகத்தின் பங்களிப்பை உள்வாங்கி மேலோங்கும் போது, இரு பக்க நல்லுறவும் பேணிக் காக்கப்படுகின்றது, எனின் அது மிகையாகாது.

இவ்வகையில் எமது கரவை விக்னேஸ்வராக் கல்லூரியும் தனது கடந்த கால வரலாற்றில் கட்டியெழுப்பிய சாதனைகளும், பெருமைகளும் போற்றுதற்குரியவை. மாவட்ட, மாகாண மட்டங்களிலும் பல முன்னணிப்

அக்காலத்தில் ஒரு பெண்பிள்ளை, கல்வியைப் பெற வேண்டும் என்ற ஒப்பீட்டுப் பார்வையால் ஓராட்டங்கள் நடந்து வரப்படும் பழைய மரபு நிலையைத் தவிர, அன்றுவரை இருந்த பெண்கள் பாடசாலைகள் பெரும் பகுதி அந்நியர்களுடைய அரசாங்க கல்வித்திட்டம் கொண்ட தாகக் காணப்படுகின்றது. நாளடைவில், காலப்போக்கில் மாணவர்களை கொண்டுபட்ட விடயங்கள் மாற்றமும் நிலையில் இன்னமையமைந்து மனிதநேயமான கட்டமைப்புக்கு இவ் சமுதாயத்திலே நாம் அக்கறையுடன் தோற்றம் பெற்றுள்ளது. கைத்தொழில் புரட்சிக்கு முன்னரைய காலகட்டத்தில் இந்தி நாட்டில் கூட இதே நிலையையே காணப்பட்டது. இங்கே சாதி என்ற வகையில் கல்லூரிகளும் ஜேசுப் பிரபுக்கள் தொண்டினை காணப்பட்ட -டமயமாக இருந்தது. மகாதேவன் தம்பின் கல்லூரிப் பருவமாக அந்தக் காலத்தில் "சாதி" என்னும் மாயை கல்லூரிகளைக்கு மெய்யினைமான புரட்சியும் வெளியேற்றப்பட்டது.

கல்விமையுடைய வேறு எந்தக் கல்லூரிக்கும் இல்லாத பெருமை எமது கல்லூரிக்கு உண்டு. ஒரு நான் கல்லூரியாக அன்றாட நிர்வாகத்தை மட்டுமல்லாமல், மாணவர்களை பாராளுமன்ற அமைப்பு முறை மூலம் பல மன்றங்களை நடத்தியமை. அதனை திரு. கரையூர் [அதிபர்] அவர்கள் 1927ல் ஆரம்பித்து வைத்தார். பின்னர் அந்த அதிபர்கள் அம்முறை சிறப்பாக்கி மேலும் வளர்த்தெடுத்தார்.

எம் கல்லூரிச் சரித்திரத்தில், நட்பெயர்ப்பெயர்மால் என்றும் மறக்க முடியாத நிகழ்ச்சியும் இங்கே குறிப்பிட வேண்டும். 1930ல் அதிபர் சென்றி பண்டிதர் ஒருவர் இலங்கை அந்த பொது தமிழ்மொழி உடைமைப் பக்கீர்களை என்றார். எமது கல்லூரியினை மாணவர்களும், பெற்றோர்களும் ஒன்றுபட்டு எதிர்ப்புக் காட்டினார்கள். கல்லூரி நடைமுறையில் ஏற்பட்ட வரலாறு ஆகும் மாற்றம் கொண்டுவரப்பட்டது. அதன் கொடி வாக்கியம் "We will not Falter" [நாங்கள் தளர மாட்டோம்]. அழகுமான இந்த வாக்கியப் பொன்னெழுத்துடன் படைப்பு அமைத்தனர். கல்லூரியின் வரலாற்றில் எத்தனையோ முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். அதனால் இன் வரலாற்றையும் இந்நிகழ்ச்சியை அனுபவமாகக் குறிப்பிட்டுள்ளனர். கல்லூரியின் பெயர், வரலாறு கூறும் அடித்தளம் பெயர் எல்லாம் மாற்று காட்டினர். ஆனால் அந்தக் கொடி வாக்கியம் "We will not Falter" என்ற தொனியை நிலைத்து நிற்கின்றது. இவர்கள் பெருமையோடும் இந்த நிகழ்ச்சியை நாங்கள் பொழுது எப்பொழுதும் நினைவுகூர்ந்து பெருமையாய் நினைப்போம்.

1971 அளவில் பொன். கணேசன் அவர்களது அயராத முயற்சியால் கல்லூரி கீதம் வி. கந்தப்பு அவர்களால் மொழியப்பட்டு திரு. நமசிவாயம் அவர்களால் உயர் பொலி ஒர் இசையமைத்து வழங்கப்பட்டது. திரு. ம. சிவசிதம்பரம் (M.P) அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் குறிப்பிட்ட சில கட்டிடங்களும் திறந்த வெளி அரங்கு ஒன்றும் நிறுவப்பட்டது. [தற்போதைய இதன் பெயர் சோமசுந்தரம் அரங்கு]. பழைய மண்டபமானது திரு. ஜெயக்கொடி (பா.உ) அவர்களால் வழங்கப்பட்ட நிதியால் புனரமைக்கப்பட்டது. திரு. இராஜ-லிங்கம் அவர்களது நிதி ஒதுக்கீட்டில் மேற்குப்புற மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. திரு. நமசிவாயம் காலத்தில் ஆசிய அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் சில மாடிக் கட்டடங்களும், நூல்நிலையம், பெண் ஆசிரியர் தங்கும் அறை, 160' நீளமான மதில் என்பன புனரமைக்க உதவின.

திருவனந்தபுரத்தில் இருந்து கடல் கடந்து வந்து கற்பித்த பட்டதாரி ஆசிரியர்களிற்கு நாம் என்றும் கடமைப்பட்டவர்கள். எமது கல்லூரியால் ஒவ்வொரு செயற்பாடுகளிற்கும் ஒவ்வொரு ஆசிரியர் பொறுப்பாக இருப்பர். அவர்கள் தம் தம் செயற்பாடுகளைத் திறம்படச் செய்ய அயராது உழைப்பர்.

விக்னேஸ்வரா பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் எண்ணிப் பார்க்கும் போது முதலாவதாக கலைத்துறை சிறப்புற்று விளங்க வேண்டும் என்பது எனது அவா. கலைத்துறையின் இயல் - இசை - நாடகம் எனும் முத்தமிழும் கல்லூரித் தமிழறிஞர்களின் உறைவிடமாக மாறி வளர்ச்சி பெற்று புத்தெழில் பூத்து புதுயுகம் படைக்கப்படும் என்பது என் கருத்து.

"உண்மை வெல்லும்" எனும் வாசகம் கொண்ட நாம் எப்போதும் எதிலும் தளரமாட்டோம் இது எம் தாரக மந்திரம். இதுவே நாம் உயர்ந்து பொலிக்கும் முன்னோடியின் புத்திமதி. டோக்கியோ [ஜப்பான்] இல் இடம்பெற்ற World exhibition of child Art, [இந்தியா] டெல்லியில் நடந்த Shankers, International; Girl hood சுயம் என்பனவற்றில் நாம் முதற்பரிசை தட்டிச்சென்றோம். கொழும்பில் இடம்பெற்ற Royal food and Agriculture விழாவில் நடந்த போட்டியில் துரைரட்ணம் வெள்ளிப்பதக்கம் பெற்று புகழீட்டினார். ம. சாரங்கபெருமாள் சிறந்த நீர் வர்ண ஓவியர்.

பொது அறிவு, கற்றல், அமைதி சிறந்த சமூக உறவுகள் என்பன விக்னேஸ்வராக் கல்லூரியை வழி நடத்துவதற்கு மேலும் துணை நின்றன. எமது கல்லூரி நல்ல நிர்வாகம் விளையாட்டு நலவளம், கட்டிடம் கற்றல் கற்பித்தல் சாதனைகளிலும் திருப்தி எனலாம்.

அத்துடன் விளையாட்டுத் துறையிலும் முதன்மை பெற்று மாவட்டத்திலும் மாகாணத்திலும் பல [illegible]

விளையாட்டுத் துறையில் சிறப்பாக உதைப்பந்தாட்டத்தில் விக்னேஸ்வரா முதலிடம் வகித்தது. யாழ்மாவட்டத்திலே பல சுற்றுப் போட்டிகளில் பல தடவை வெற்றிக் கிண்ணங்களை தன்பால் தக்க வைத்துக் கொண்டமை கல்லூரியின் சிறப்பை மேலும் அதிகரிக்கின்றது.

1952ல் Colombo - Plan exhibition அரங்கில் இடம் பெற்ற அகில இலங்கை ரீதியிலான சுற்றுப் போட்டிகளில் விக்னேஸ்வரா முதல் இடத்தைப் பெற்று இலங்கைப் படத்தில் தன் பெயரைப் பொறித்துக் கொண்டது. இது கல்லூரி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சாதனை. இதன் பொறுப்பாளராக இருந்த திரு. M. இராமையாவும் அணியின் உறுப்பினர்களும் நெல்லியடிச் சந்தியில் இருந்து விக்னேஸ்வரா வரை கோலாகலமாக அழைத்து வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதும் வரலாற்றுக்குரியது.

1944 தொடக்கம் 1946 வரை வடமராட்சி ஆசிரியர் நிலையத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் மூன்று தடவை கேடயங்களைப் பெற்று அழியாது வென்றனர். 1937இல் உதைப்பந்தும், 1959 இல் வலைப்பந்தும் கல்லூரியில் அறிமுகமாயின.

"மனிதனை மனிதனாக்குவது வசதிகளும் சந்தோசங்களுமல்ல; இடையூறுகளும் துன்பங்களுமே" என்றார் கவிஞர் [illegible] மத்தியூஸ். மிகுந்த கஷ்டங்களின் மத்தியில் பெற்ற பயிற்சியே இத்துணை வெற்றிக்கும் காரணம்.

விளையாட்டுத் துறையில் மாணவர்கள் தொடர்ந்து கல்லூரியின் புகழை நிலைநாட்டிய வண்ணமே உள்ளனர். 1964ல் 14 வயதுக்குட்பட்ட பிரிவில் செல்வன் ந. தங்கத்துரையும், 13 வயதுக்குட்பட்ட பிரிவில் க. கனகசிங்கமும் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்றனர். உடற்கல்வியில் விக்னேஸ்வரா நிறம்பட உழைத்தது என்றுதான் கூறவேண்டும்.

1990ம் ஆண்டளவு 17 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்டக் குழு யாழ்மாவட்டப் பாடசாலைகளிற்கிடையிலான சுற்றுப் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

1952 இல் ஆசிரியர் நலன்புரிச் சங்கம் ஒன்று சிறப்புடன் செயற்பட ஆரம்பித்தது. வறிய மாணவர்களிற்கான புலமைப்பரிசிலை சங்கம் வழங்கியது. இச்சங்கமானது இலாப நோக்கம் கருதாது ஒரு தேநீர்ச்சாலையை நிர்வகித்து வருகின்றது. இதன் பொறுப்பாளராக திருமதி. [illegible] மோகனதாஸ் அவர்கள் நன்கு செயற்படுகிறார்.

வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி ஆரம்பித்து விட்டால் கல்லூரியே விழாக்கோலம் பூண்டிருக்கும். பயிற்சிகள், பந்தல்கள்,

1950களின் நடுப்பகுதியில் ஆரம்பப் பிரிவு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இது சிறப்பாக இயங்கியமை காரணமாக பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இங்கேயே சேர்ப்பதற்கு அடியெடுத்து நின்றனர். இதனால் சில பாடசாலை அதிபர்கள் திணைக்களத்திற்கு கூட முறையீடு செய்தார்கள்.

1973இல் முகாமையாளர் K.C.N இன் அழைப்பின் பெயரில் அக்காலத்தின் கல்வி அமைச்சர் பீ.டி.பண்டா கல்லூரிக்கு வருகை தந்தார். 1963இல் இலங்கையின் உயர் இந்திய ஸ்தானிகர் P.R.S மணி என்பவர் நிறுவுனர் தினத்திற்காக அழைக்கப்பட்டிருந்தார். ஐம்பதுகளின் இடைப்பகுதியில் இருந்து அறுபது வரை இடதுசாரி அரசியல் தலைவர்களும் கல்லூரிப் புனித மண்ணில் தம் கால்தடங்களைப் பதித்திருந்தமை போற்றுதற்குரியது.

கல்லூரி வரலாற்றில் மேலும் சில முக்கியமான நிகழ்வுகளாக, திறமையாளரான மொழிபெயர்ப்பாளரான திரு. பாலா சிறந்த படைப்பினை நடித்தார். இவர் எழுதிய "சியபாலா" நாடகம் முதன்மைகளில் முதன்மையாய் சிறந்து விளங்கியது, நாடகத்துறையால் ஆக்கப்பட்ட "அண்ணை -றையிற்" என்ற நகைச்சுவை நாடகம் இலங்கை வானொலியாலும், தொலைக்காட்சியாலும் ஒளிபரப்பப்பட்டமை, 1973இல் "சாகுந்தலம்" நாட்டிய நாடகம் வட்டார ரீதியில் முதலிடம் பெற்றமை, சி.கதிர்காமநாதனால் ஆக்கப்பட்ட "ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான்" என்ற சிறுகதை நகரில் வயலையும், விக்னேஸ்வராக் கல்லூரியையும் வைத்து இயற்றப்பட்டது. இது பல பாடநூல்களில் இடம்பெற்றதுடன் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங் -களில் உரியவரவேற்பும் அளிக்கப்பட்டமை, 1955இல் சுகாதார வார நாடகத்தில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றமை, போன்றவற்றைக் குறிப்பிட முடியும். 1977ல் H.N.C.E கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போரின் இறுதியில் இலங்கையில் லண்டன் பரீட்சைகள் நடத்தப்படவில்லை. பதிலாக மற்றிக் குலேசன் பாடத்திட்டத்தை அடியொற்றி ஒரு வகையான உயர் தராதரப் பரீட்சை 1994ல் நடாத்தப்பட்டது. எமது கல்லூரியில் 1994 இல் 24 மாணவர்கள் தோற்றி 21 பேர் சித்திபெற்றனர். மூன்று மாணவர்கள் மற்றிக் குலேசன் என்றதற்கு பெறு தகுதி பெற்றனர். விக்னேஸ்வராவிலிருந்து எமது காலத்தின் பிற்பகுதியில் லண்டன் மற்றிக் -குலேசன், கேம்பிரிஜ் சீனியர் பரீட்சைகளிற்குத் தோற்றுவிக்கப்பட்ட மாணவர் -களினால் ஒருவருடம் இலங்கையிலே விக்னேஸ்வரா முதலிடம் பெற்றது. பல்கலைக்கழக கலைத்துறைக்கு சி.கதிர்காமநாதனை [பி.பி.எஸ் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர்] முதலாவதாக அனுப்பி தொடர்ந்து க. குணசிங்கராஜா,

இன்று பரீட்சைகளில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் சிறந்த பெறுபேறுகளே கல்லூரியின் புகழுக்கு காரணமாக அமைகின்றன. 2007ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த/சாதாரணபரீட்சையில் தேசியமட்டத்தில் எம் கல்லூரி 'ஐந்தாம்' இடத்தைப் பெற்றுக் கொண்டது. பரீட்சைப் பெறுபேறுகள் என்னும் இலக்குடன் மேலதிகமாக விளையாட்டு துறையிலும் பெரிய கல்லூரிகளோடு ஈடாக ஈடுபாடு காட்டிவருகின்றன. நிறுவனத்தின் சீவியத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படலாம். அது இயற்கையின் நியதி. ஆனால் அந்த ஏற்ற இறக்கங்களிலும் தனது இலட்சியத்தை கைவிடாது பேணிப் போற்றி வளர்க்க வேண்டும். பத்தோடு பதினொன்றாக நாமும் சேர்ந்து பரீட்சைப் பந்தயத்தை மாத்திரம் கல்வியின் ஒரே முடிவாக கொள்ளாது கல்வி முறைமையையும், ஒழுக்கப்பாட்டையும் பொறுத்த மட்டிலும் "உண்மையே வெல்லும்".

விக்னேஸ்வரா கரவையின் கலைக்கோயில். எனக்கு அறிவையும் ஆற்றலையும் தந்து, வளர்த்து மனிதனாக உயர்த்திய கோயில். கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன், சமூகத்தோடு இணைந்து வாழ வைத்து என்னை உருவாக்கிய கல்வி நிலையம். அதனால் எனது நன்றிக்கடனை மனம் கோணாது பலவகைகளில் கல்லூரிக்குச் செய்வதில் நான் தவறியதில்லை. விக்னேஸ்வரனை மனத்திருப்தியோடு நேசிக்கின்ற, தம்மைக் கற்பித்த ஆசிரியரை மதிக்கின்ற மாணவர்கள் இன்றும் சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள்.

சமய, சமூகக் கலாசாரங்களைப் பேணுகின்ற மக்களுடன் பல கிராமங்களின் மத்தியில் தலைநிமிர்ந்து நிற்கின்ற இக்கல்லூரி நகரக் கல்லூரிகளுக்கு நிகரான மாணவச் செல்வங்களை வளர்ப்பதில் பெருமை கண்டது. இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் அயராது உழைத்த முகாமையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் சேவையை கரவை விக்னேஸ்வரா தலைசாய்த்து நினைவு கூர்கின்றது.

எமது கலைக்கோயில் இவ்வாறு எல்லாவளங்களும் நிறைந்த தனித்துவமான பல்கலைக்கழகமாக மிளிர்கின்றது. இங்கிருந்து விளைந்தெழும் மரங்களின் இணையில்லா பயன்பாட்டில் இவ்வையகமே நிறைவு பெறும். தற்கால அரசியல் போர்க்கால நிலையிலும் மாணவர்கள் மிக முனைப்பாகவும், உற்சாகத்தோடும், விளையாட்டு, கல்வி, அறிவு நுண்ணறிவுத் துறைகளிலும் முன்னணியில் திகழ்வது யாவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. தொடர்ந்தும் அவர்களை உற்சாகப்படுத்தி முன்னணியில் மிளிர வைப்பது பொறுப்பாசிரியர்களதும் பெற்றோர்களதும் இன்றியமையாத பொறுப்பு,

## வாய்மையே வெல்லும்

### கட்டுரை ஆக்கம்

* வாய்மை என்பது என்றும் நிலைப்பது எல்லோராலும் விரும்பப்படுவது; போற்றப்படுவது. வாழ்க்கை என்பது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்டது மட்டுமல்ல, இறப்பிற்குப் பின்பும் உள்ளது. காலம் கடந்தும் ஒருவனால் உயிர்வாழ முடியும். அவ்வாறு வாழ்வதற்கான வழிகளில் மிகவும் முக்கியமானது உண்மையேயாகும். உண்மையினால் நேர்மை வாழும். புடமிட்டு எடுத்த தங்கம் மணம் பெறுவதைப் போல உண்மையைக் கடைப்பிடிப்போரும் வாழ்வில் நல்ல பெயர் புகழ் பெறுவர்.

வாய்மை என்றால் என்ன? எப்பொழுதும் உண்மையைக் கூறுதலே வாய்மை எனப்படும். பொய்மை தவிர்த்து வாழ்தல் வாய்மைக்கு உரியதொன்றாகும். வாய்மைக்கு இலக்கணம் வகுத்தவர் வள்ளுவர்;

வாய்மை எனப்படுவது யாதெனின்
யாதொன்றும் தீமையிலாத சொலல் என்கிறார். மற்றவர்க்கு எந்த விதத்திலும் தீமையுண்டாக்காத சொற்களைக் கூறுதலே வாய்மை ஆகும் என்றும்

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும் என்றும் வள்ளுவர் வாய்மையின் சிறப்பினை உணர்த்துகின்றார். உடலைத் தூய்மைப்படுத்த நீரே போதுமானது. உள்ளத்தூய்மைக்கு வாய்மை இன்றியமையாதது. வள்ளுவர் மேலும் இப்படி

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன் - என்கிறார். உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவது உண்மையேயாகும். உண்மை வழியிலே வாழ்வோர் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம்

இடம்பெறுவான். ஒருவர் மனம் ஒன்றி உண்மை சொல்வான் என்றால் அவன் தவம் செய்வோரின் நிலையை எய்துகின்றான் எனவும் வள்ளுவர் எடுத்துக் காட்டுகின்றார்.

'மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை' என வாய்மையின் சிறப்பினை வள்ளுவர் புலப்படுத்துகின்றார். வாய்மை பேசுவோர் இயல்பாகவே தூய்மையடைகின்றனர். இதனால் அவர்கள் எந்தப் பிற தர்மங்களும் செய்ய வேண்டியதில்லை என வள்ளுவர் குறிப்பிடுகின்,

'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று' - என்பது. அவர் இதற்கு வாய்மை குறித்து அவர் எழுதிய பத்துக் குறள்களும் வாய்மையின் சிறப்பை நன்கு புலப்படுத்துகின்றன.

வாய்மையால் மேன்மையுற்றோர் பலர். அவர்களுள் அரிச்சந்திரனும் அவர் வழிவந்த காந்தியடிகளும் குறிப்பிடத்தக்கோர் ஆவர். வாய்மை தவறாது நடக்கும் போது சில துன்பங்கள், வேதனைகள் ஏற்படலாம். ஆனால் இறுதியில் வாய்மையே வெல்லும் என்பதற்கு மேற்குறிப்பிட்டோரின் வாழ்வே நல்ல சான்றாகும்.

வாய்மை ஒருவனை நல்லவன் ஆக்குகின்றது. பெருமை பெறச் செய்கிறது. அந்தப் பெருமை அவனுக்கு மட்டுமின்றி அவனைச் சார்ந்தோரையும் பெருமையடையச் செய்கிறது. வாய்மை வாழ்வு தரும் என்பதை நாம் நன்கு உணர்தல் வேண்டும். வாய்மையும் வாழும் வாய்மை உடையோரும் என்றும் நிலைத்து வாழ்வர்.

வாழ்வின் வெற்றியே புகழாகும். அந்தப் புகழும் வாய்மை வழியே வரும்போது நிலைத்த புகழாக மாறும். இந்த உண்மை நன்குணர்வோர் வாய்மையே என்றும் வெல்லும் என்பதை ஏற்றுக்கொள்வர். வாய்மையே மேன்மை தரும் என்பதை நன்குணர்ந்து, என்றும் வாய்மை பேசுபவர்களாக நாம் வாழுதல் வேண்டும்.

'உண்மை பேசி உத்தமனாக வாழ்' என்ற பொன்மொழிக்கேற்ப மாணவர்களாகிய நாம் என்றும் உண்மை பேசுபவர்களாக வாழ வேண்டும். 'வாய்மையே வாழ்வு தரும்' என்ற இலட்சியத்துடன் செயற்பட வேண்டும்.

ஆக்கம்
[illegible]
தரம் 7B

# Scientific respect

A2, P1

When I was
in the initial stage
you fixed me
on you without friction
physically I joined you.

When I was
in the first step
you made me
to produce activated complex
but I reacted slowly
chemically I observed you

When I was
inclined on you at 30°
you made me
to be in equilibrium.
mathematically I traced you

When I collide
with my colleagues
you made them elastic
so I was conserved
energetically I accompanied you

when I accelerate my self
you gave a driving force
it made me to continue
with no friction

Now I'm in the final stage
you are giving an extra arm
with high voltage and low resistance
for high electric power
as my friend Ohm said
Currently I'm in the gate of yours & fate of mine

B. Sumanthan
12 science
(Biology)

## விஞ்ஞானம்

காலங்கள் பல கடந்து
கடுகதியாய் பயணிக்கும்
விஞ்ஞான உலகமிது !

எத்தனை எத்தனை எண்ணங்கள்
அத்தனையும் வண்ணங்களாய் !

அசைந்து ஆடிவரும் மாட்டுவண்டி
யுகம் மறைந்து
விமானம் எங்கள் வழிப்பயணம் ஆனதுவே !
சிரிப்பினை சிறிதாக்கி
இஷ்ரம் போல் நம்மை ஆட்டி வதைக்கும்
கொடிய நோய்களெல்லாம்
புலி நிழல் கண்ட மான் போல்
வைத்தியனின் ஊசிமுனைக்கு
ஓட்டம் பிடித்தனவே !

உடலால் ஊனம் கண்டோரெல்லாம்
என்னிருதைய மாட்டப்பட்ட காலம் விரட்டப்பட்டு - ஆங்கே
விடிவிற்கு வித்திட்டது
விஞ்ஞானத்தின் செயற்கை அங்கங்களாம் !

சந்திரனில் கல்லெடுத்து
செவ்வாயில் வீடுகட்ட
ஆரவாரம் நடக்கிறதாம்
நாசாவில் !

எலும்பும் சதையும்
ஒருங்கே பரிணமிக்க
தோன்றிட்ட மனித உடல்

விந்தைமிகு இயந்திரம் என்றால்
'குளோனிங்' முறையதனால் — நம்
விஞ்ஞானியும் ஆங்கே
பிரம்மதேவன் ஆகின்றான்!

மேந்தலைஎறியி, புல்லூடகஎறியி
கணனிக்கல்வி, தொலைக்காட்சி
செயற்பாட்டறை, ஆய்வுகூடம்
எல்லாவற்றையும் — எம்
கையில் எடுத்து
கற்பித்தலில் புதுமை காட்டிடுவோம்!
புதுயுகம் படைத்திடுவோம்!

சாரயக் கிடை வரிசை போல்
நீண்ட பெரும் வரிசைகளில்
வங்கிகளில் காத்திருந்த காலம்
வேரறுந்து போக
முகிழ்க்கின்றன
ATM, VISA, CREDIT அட்டைகள்!

இணையமே தெரியாமல்
காலப்பக்கங்கள் புரட்டப்பட்டு
இன்று இணையமே வாழ்வானது!
பணத்திற்காய், பதவிக்காய்
கலைந்து போன உறவுகள்
Face book இலும் Skype இலும்
ஆங்கே குடும்பமாகிறது!

அம்மம்மோ!
பட்டதாரிகளின் பெயர்கள்
வேலையற்றோர் பட்டியலில் இருக்க
ரோபோக்களை — வேலைக்கு

வைத்திருக்கும்
பொறுப்பற்ற உலகமிது!

ஆக்கநெறியில் உளத்தைக் கொண்டு
தேக்க நிதியம் தேடிக் குவித்து
கண் விழித்துக்
காரியம் கைகூட
பொறுப்புடை நெறியில்
புதுமையாய் உழைக்கும்
விஞ்ஞானத்தால்
முழுமதியாய் விளங்கிற்று மனிதநேயம்
விழுமியத்தால் நிறைந்திட்ட மக்கள்கண்டு
விண்ணவரும் பார்த்திங்கே
வியந்து போனார்!

முடியவில்லையே...

நேர்கோட்டு இயக்கமாய் என்னை
நேர்வழியில் செல்ல வைக்கிறாய்.
எதிரொலியாய் நான்
எதிர்த்து எதிர்த்து பேசினாலும்
அலை உறிஞ்சியாய்
பொறுத்துக்கொள்கிறாய்..

சக்திக் காப்பு விதியாய்
சக்தி அளிக்கிறாய்
திணிவு காப்பு விதியாய்
திணறடிக்கிறாய்
அலை இயக்கமாய்
அன்போடும் அணைக்கிறாய்

சும ஆவர்த்தன அலைவுகளாய் நீ
காலம் சென்றாலும் - உன்
அன்பு வீச்சம் மட்டும் மாறவில்லை..

பரிவாணால் என்னை பரிவோடு
அழைக்கிறாய்.
பரிமாண வகைப்படி பார்
நான் உன் மகள்தானம்மா..

நான் நகரும் நுணுக்காட்டி இல்லை
ஈகோல்தான் நிறைய வழி உண்டு
ஆனாலும்

நியூட்டனின் மூன்றாம் விதிக்கு பயந்தா
எனக்கு நீ அடிப்பதேயில்லை.

அம்மா
அன்புள்ள அம்மா
நான்
சுழற்சி இயக்கமாய்
வட்ட இயக்கமாய்
உன்னைச் சுற்றி வந்தாலும்
என்னால் உன்னைப் பிரிந்து
கொள்ளவே
முடியவில்லை...

V. Lavanya
2013
Biology.

நாளைக்காவது . . .

நிலவாய் ஒளித்தாலும்
நிமிரவில்லை நம் உளங்கள்
இன்னமும் கைகட்டி அழைக்கிறோம்

பாம்பு விழுங்கிறதாம் நிலவை
இல்லை எம் பாழ்பட்ட மனங்களை
விழுங்கிறது அறியாமை.
சூரியப் பயணத்தைப் பற்றிக்கூற
சோதிடனுக்கு போகின்றோம்
சந்திரனத்தில் ஆராய்ச்சி
இங்கோ
ஏணிக்கு விடைபூஜை

திரைகடல் ஓடியும்
திரவியம் தேடியும்
திருப்பிவிட்டது நம் வாழ்வு

ஏன் வெள்ளையரின் ஆயுத முனையாலல்ல
அறிவுமுனையால் இறந்தோம்.

நாம் வெண்கொற்றக் குடையாட
வெள்ளையர் வெங்காயம் நட்டனர்.
அவர்கள் முன்னோர
நாம் தூங்கி வழிகிறோம் நின்ற இடத்திலேயே
இன்றும் எம்மை முந்தும் நடைக் காற்றான்
மனைவிக்கான
வெற்றி தருகின்றார் வாலைக்கு

இதுவரை விஞ்ஞானத்தின் காலடியாய்
வீழ்ந்திருந்தோம்.

இனி காதலியாக்கி கரம் பற்றுவோம்.

நாம் நினைத்தால் நாட்கள் தொலைவாய்
இல்லை
but இந்த நிலவாய் நாம்
தொலைதூர் வடிவேயாக

நாளையாவது
நாமும்
நிலவைத் தொடுவோம்

பு. லோகன்
12 sci (2013)

## விக்னேஸ்வராவின் வியத்தகு விந்தைகள்!

இசையும் பாடசாலை என்றும்
இனிய வசந்த தென்றல்!
இதமாய் வளர்ந்து நிற்கும் - எம்
இனிய விக்னேஸ்வராவே!
உன் பெருமைகளோ பல
இருந்தும் அவற்றில் சில - என்
கவியில் சொல்லுகிறேன்.

எம் கல்விப் பாதையின் வழிகாட்டியாய்
எம் கல்லூரியின் விளக்காய் திகழும்,
எம் கல்லூரி முதல்வர் - அவர்
எம் விக்னேஸ்வரா பெற்ற வீரப் புதல்வர்!
அகரங்களை சிகரமாக்குவதும்,
சிகரங்களை தங்கமாக்குவதும்.
உமக்கே உரிய உயரிய குணம் ஐயா!
உம்மை வாழ்த்துகின்றோம்.

அன்பாக எம்மை அணைத்து,
அறிவுரை ஊட்டுவோர் - எமக்கு
ஆசிரியர்கள் பலர் - நல்ல
பணியை பயிற்றுவிக்கும் - எம்
பாடசாலை அதிபர்!
சகோதரத்துவத்தை காட்டும்
எம் சக மாணவர்கள்!
அனைவரும் விக்னேஸ்வரா அன்னையின்
வீரப் புதல்வர்களே! — — — —

மாணவர்கள் நாம் கல்வியிலும் விளையாட்டிலும்
படைத்த சாதனைகளோ பல - இன்றும்
கல்லூரிக்கு பெருமை சேர்க்கும் வரை - நாம்
களைப்படைய மாட்டோம் - நீ
உருவாக்கிய விஞ்ஞானிகளோ எத்தனை எத்தனை!
கலைஞர்கள் எத்தனை பேர் - இன்றும்
பொறியியலாளர்கள், கணக்காளர்கள் எத்தனை!
இத்தனையும் உன் பெருமைகளே - - - - - - - -

மாடிக் கட்டடங்கள் பல - இன்று
வானை முட்டும் அளவிற்கு!
வெற்றிப்படிகளாக வளர்ந்து - உன்
பழைய மாணவர்கள் பலர்!
இதற்கு பக்க பலமாக உள்ளார்கள்.
ஒழுக்கத்தையும் கல்வியையும்!
ஒன்றாக சேர்த்து ஊட்டுவதால்
மாணவர்கள் எல்லோரும் உன் புகழை
மங்காது காக்கின்றார்கள்! - - - - - - -

விக்னேஸ்வரா இன்றைக்கு பெருமை சேர்க்க,
பல்கலை செல்லும் கல்லூரிமாணவர்கள் - நாம்
பல்கலை கற்று பட்டம் பெற்று!
பாரினில் உயர்ந்து விளங்குவோம் - என்றும்
இலட்சிய வெற்றியோடு - எம்
கல்விப் பாதையில் பயணிக்கின்றோம் - உன்
பாதச் சுவடுகளைப் பணிகின்றோம்.

வாழ்க எம் விக்னேஸ்வரா!
வாழ்க உன் சாதனைகள்!

இங்ஙனம்
செ. மைனாற்றா - சிங்கராஜா
யா/விக்னேஸ்வராக் கல்லூரி கர

மீண்டும் கல்லூரியால் - - - -

விக்னேஸ்வரா கல்லூரியின் அமைதி
மணியோசை
எங்களை நிலை குலையச் செய்கிறது.
எங்கும் மாணவர்கள் - மகிழ்ச்சியால்
துள்ளிக்குதிக்கிறனர் - ஆனால்
எங்கள் வகுப்பறைக்கும்
சோக ஒலி

கல்லூரி மாணவராக இருக்கும்
ஒவ்வொரு நிமிடங்களும்
என்னைப் புருக்கொண்டாக்கிறன.
எங்களை மாணவராக்கி - நாளை
மனிதனாக வாழவைக்கும்
பரீட்சைக்கான நேரங்கள்
எங்களை நெருங்கிய வண்ணமுள்ளன.

உயிரூட்டிய எங்கள் தெய்வம்
கூறிய இறுதி வார்த்தை - உங்கள்
வாழ்வினைத் தீர்மானிக்கும் பரீட்சை
இதுவாம்.
ஒரு நிமிடம் நினைத்துமாட்டேன்
இதையெண்ணி ஏங்குவதா? சிரிப்பதா?
புரியவில்லை

பெறுபேறுகள் வந்தும் பல்கலைக்கழக
அனுமதிக்காக
இரண்டு வருடம் காத்திருக்க வேண்டிய நிலை
மேல் நாடுகளில் ஒருவன் ௨௨ வயதில்
பட்டதாரி ஆகிவருகின்றான்.
இங்கோ ௨௨ வயதில் தான்
அனுமதிக்குப் பெறுகின்றான்.

சாதிக்க வேண்டிய இரண்டு வருடங்கள்
எங்கோ தொலைந்து போகின்றன.
இதற்கெல்லாம் யார் காரணம் ?
கல்வியாளர்களா ? ஆட்சியாளர்களா ?
புரியாத புதிரோடு
மீண்டும் மாணவனாகின்றேன்
பல்கலைக் கழகத்தில்

க. சிந்துஜா


BEST FOODS
SUPER MARKET
Tel : 0208 552 9578
OFF LICENCE
உங்களுக்குத் தேவையான
இலங்கை, இந்திய, ஆங்கில ஐரோப்பிய
மளிகைப் பொருட்கள் ,மரக்கறி வகைகள்,
குளிர்பான வகைகள்
பழவகைகள், கடலுனவு வகைகள் மற்றும்
வெளிநாட்டு குளிர்பான வகைகள் அனைத்தையும்
மிகக் தரமான விலையில்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்
BEST FOODS
SUPER
414-416 High Street North, East Ham London E12
259-261 London Road, West Croydon
Surrey CR0 2RL Tel : 020 8684 6269

# Nathan & Co

## Solicitors and Administrators of Oaths



Mr. V. Sri Shanmuganathan
Mr. V. Vaaheesan
TEL : 020 8542 1805
FAX : 020 8540 9773
106, Kingston Road, Wimbledon
London SW19 1LX

# Airport Car Service

T/A Minicabs4u.co.uk Ltd PCO: 04939/01/01

Airports
Stations
Theatres
Parcels

**020 8672 2211**
**020 8672 4442**
**07857 84 8008**

www.minicabs4u.co.uk
bookings@minicabs4u.co.uk

All calls may be recorded for training purposes

**Admin/Customer Careline: 020 8767 7741**


South Harrow Food & Wine
Sri Lankan/Indian Groceries, Fresh Fruits,
Fresh Vegetables, Sea Foods
and Off Licence
HARIN
ஹரின்
Distributors of
Harin Products
234 -236 Northolt Road, South Harrow, HA2 8DU
TEL: 020 8423 6321


WESTERN
JEWELLERS
Jewellers & Gem Merchants
230,UPPER TOOTING ROAD
LONDON SW17 7EW
PHONE : 020 8767 3445
SILK EMPORIUM
122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN
PHONE : 020 8672 1900
WESTERN
JEWELLERS & TEXTILES
5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,
WEMBLEY, MIDDLESEX HA0 4YA.
PHONE : 020 8903 0909
OPENNING HOURS
Monday to Saturday
10.00am - 6.30pm
Sunday 11.00am - 5.30pm

## VSN HOME CATERING SERVICES



*Fully vegetarian*

We are specialist in srilankan and south Indian foods. Also we do birthday parties, wedding ceremonies, Puberty ceremonies with special package.

100 string hoopers with sothi and sambal £15.00
We also make dosai, Idly, Milk hopper and Plain hopper
Rice with 5 curries and vadai payasam papadom and butter chilli…. Over 100 portion £3.00 each

**Please make the order early as possible to avoid disappointment.**

**Our reputation is your recommendation**

**3 Ockley Road , Croydon CRO 3DR**
**Tel: 0208 6659256**
**Mobile: 07802 746779**
**Mrs.Baby Vanaja Shabanathan**

## செல்வராஜா கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

### – தங்கத் திருவிழா –

தங்கத்தின் விலை அதிகரித்துவிட்டாதா? கவலை வேண்டாம்!
தாலிக் கொடிகள் அனைத்தும் செய்கூலி சேதாரம் இன்றி செய்து கொடுக்கப்படும்!

கூறைப்பட்டுப்புடவைகள், பட்டுப்புடவைகள் அனைத்தும்
40% விலைக் கழிவுகள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்,
சுடிதார், சோலி அனைத்தும் நம்பமுடியாத விலைக்கழிவுகளில்

புதிதாக இணைந்துள்ள சீட்டுத் திட்டத்தில் இணைந்து நீங்களும்
ஒரு அதிஸ்டசாலியாகுங்கள்



**SELVARASA GOLD HOUSE & TEXTILES**
**162 B Mitcham Road**
**Tooting SW17 9NJ**
**0208 767 3795 / 07825005269**

# JR Print

www.jrprint.com

61, Hoe Street, London E17 4QR
T : 020 8503 6643
F : 020 8521 3967
M : 07939 998 730
E-mail : ravi@jrprint.com
Web : www.jrprint.com




* Arangetram Books
* Cake Boxes
* Bill Books, Invoices
* Leaflets
* Rich Cakes & Boxes
* Raffle Tickets
* High Speed Copier
* Rubber Stamps
* Lamination
* Translation Services
* Birthday Cards
* Letter Heads
* Wedding Cards
* Short Eat Boxes
* Photocopying
* Compliment Slips
* Short eat Bags
* Gold Blocking
* Visiting Cards
* Colour Printing
* Invitation Cards
* Souvenirs & Invoices
* Fast, Relaible & Friendly Service

**Guaranteed Delivery Within 72 Hours In Europe at Minimal Cost.**
**Call For Free Quatation**

# Portland Estate Agents

UNITED KINGDOM LIMITED

W: www.portlandestate.co.uk
E: ponsiva@msn.com

## MORTGAGES, REMORTGAGES
## BUSINESS LOANS FOR SHOPS
## PETROL STATIONS & HOTELS



**Mortgages - Remortgages - Commerical Loans**

*Call Pon Siva*

9 St.James Road
Croydon, Surrey.
CR0 2SB

Tel: 020 8683 1313
Mob: 07958 953 199
Fax: 020 8684 0444



## ஆட்டிஸ் சேரின் நினைவுகளுடன்...

எங்கிருந்தோ வந்தார் என் உயிர் பணி என்றார்
ஆட்டிஸ்சேர் எங்கிருந்தோ வந்தார்
இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்
ஆட்டிஸ் சேர் எங்கிருந்தோ வந்தார்

மாணவராய் ஆசானாய் மதிக்கும் உப அதிபருமாய்
பண்பிலே சிகரமுமாய் பார்வையிலே சேவகனுமாய்
ஆட்டிஸ் சேர் எங்கிருந்தோ வந்தார்
என் உயிர் பணி என்றார்

தியகாம் நீதி நேர்மையின் இருப்பிடமாய்
எல்லோரும் ஒன்றெனும் பார்வையுமாய்
ஆட்டிஸ் சேர் எங்கிருந்தோ வந்தார்
என் உயிர் பணி என்றார்

நீள நிமிர்ந்து நிற்கும் மாடிக் கட்டிடமும் உங்களிடம்
கற்றறிந்த மாணவர் குழாமுமே
என்றும் உங்கள் நினைவுடன் வாழ்வமே
சாந்தி ... சாந்தி ... சாந்தி... உங்கள் ஆத்மா
சாந்தியடைய வேண்டுவோம் இறைவனை

பழைய மாணவர் சங்கம்
ஐக்கிய இராச்சியம்

Designed & Printed at JR Print, T : 0208 503 0643